தொழில்

ஆசிரியர்: INDUSTRY

K. பெருமாள் உடையார்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
2 MAR 1959
MADRAS

புதிய 25 காசு

PHONE : 4305 Grams : "GOODL... ..RT"

MURLIMAL SANTRAM & CO.,

(MADRAS) PRIVATE LTD.,

GOVERNMENT CONTROLLED STOCKISTS OF
STEEL & PIPES

13, Sembudoss Street, Madras-1.

★

Pipes available from Ready Stock,

GALVANISED, BLACK AND STEAM QUALITY

PIPES ½" TO 6" FROM

TATA / S & L AND BEST IMPORTED AND ALSO

PIPE FITTINGS - IN ALL SIZES.

CONTACT FOR REQUIREMENTS.

தொழில்

இந்த இதழில்

1—3—59

நகர சபைத் தேர்தலும்,
மக்கள் கடமையும் ... 3
தனியார் தொழிலுக்கு உதவி 5
கைத்தொழில் முறைகள் ... 9
தொழிலாளியும் முதலாளியும் 13
ஆயுத போலீஸ் கதை ... 38

தொடர் நாவல் :

இதுதான் காதல் ... 17
மறைந்த குற்றவாளி ... 33
நாட்டுக் காதல் (இலக்சியம்)... 43

சிறு கதைகள் :

பூவழகி ... 49
வைராக்கியம் ... 58
கலைமணம் ... 66

கதை கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே

Statement about ownership and other particulars about Newspaper (Thozhil)

to be published in the first issue every year after the first day of February

FORM IV

(See Rule 8.)

1.	Place of Publication	MADRAS.
2.	Periodicity of its publication	Fortnightly (with special weekly supplements)
3.	Printer's Name, Nationality, & Address	K. N. THIRUVENGADAM, Ananda Parvathi Press, Indian 30, Edapalayam St., Madras-3,
4.	Publisher's Name, Nationality, & Address	K. PERUMAL UDAYAR, Indian 55, Edapalayam St., Madras-3
5.	Editor's Name, Nationality, & Address	K. PERUMAL UDAYAR, Indian Same as above.
6.	Names and addresses of individuals who own the newspaper and partnersor shareholders holding more than one per cent of the total capital.	Nil

I, K. Perumal Udayar, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Dated: 1—3—1959:

K. PERUMAL UDAYAR.
Publisher & Editor.

1058

"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே !"

தொழில்

ஆசிரியர் : கே. பெருமாள் உடையார்

தொழில் 1	சென்னை, 1—3—59	இதழ் 21

நகர சபைத் தேர்தலும், மக்கள் கடமையும்.

தமிழ்நாடு முற்றும் நகரசபைகளுக்கான தேர்தல் ஏற்பாடுகள் மும்முரமாய் நடைபெற்று வருகின்றன ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களும், எதிர்க்கட்சிக்காரர்களும் இத்தேர்தலில் வெற்றிபெற தீவிரங் காட்டுகின்றனர். எந்தக் கட்சியையும் சாராமல் சுயேட்சையாய் நிற்போரும் ஆங்காங்கு காணப்படுகின்றனர். பொதுவாக, கட்சி பலத்தால்தான் பொதுநலத்துறையில் எதையும் சாதிக்க முடியும் என்ற உண்மை எங்கும் பரவியுள்ளது. பல நகரங்களில் குறிப்பிட்ட கட்சிகளே (மெஜாரிடி) பலம் பெற்று செயல் படுகின்றன. எதிர் கட்சியினரின் எதிர்ப்பே அவர்களின் செயல் திறமையை ஊக்குவிக்கிற தென்னலாம்.

நகரசபைகளின் பொறுப்பு மகத்தான தென்பதை நாம் அறிவோம். 208364

நகரத்தை சுத்தமாயும், சுகாதாரம் குன்ருததாயும் காப்பாற்றக் கடமைப்பட்டது நகரசபை. சிறுவர்க்கு இலவசக் கல்வி புகட்டவும், பகலுணவுத்தரவும் பொறுப் பேற்றுள்ளது நகரசபை. வைசூரி, காலரு போன்ற தொத்து நோய்கள் பரவாதவாறு ஆவனச் செய்து மக்களைக் காக்க கடமைப்பட்டுள்ளது நகரசபை.

எந்த மனிதனும் தான் வசிக்கும் வீட்டை சுத்த மாயும், அழகாயும் வைத்துக்கொள்ளத்தான் விரும்பு வான். அதைப்போல் நகரத்தை சுத்தமாயும், அழகாயும் வைத்துக் கொள்ள நகரசபை கடமைப்பட்டுள்ளது. அதில் அங்கம் வகிப்பவர்கள் எத்தரத்தினராய் இருக்க வேண்டு மென்பதை பொதுமக்களே தீர்மானித்துக் கொள்ளவேண்டும். தந்நலப்பற்று அற்ருரே பொது நலப்பணிக்கு ஏற்ருேர் என்பது பொதுவான அபிப்பி ராயம். ஆனல், தந்நலப்பற்று அற்ருேர் யார் என்பதை அவரவர் முந்திய நடவடிக்கையைக் கொண்டுதான் நிர் ணயிக்க முடியும். பொதுநலப்பணிக்குத் தகுதியற்றவ ஞகவோ, சுயநலவாதியாகவோ உள்ள ஒருவனை கட்சி சார்பை முன்னிட்டோ, வேறு துறையிலுள்ள செல் வாக்கைக் கருதியோ தேர்ந்தெடுப்பது விவேகமல்ல.

கட்சிக்கட்டுப்பாடு என்பது முக்கியம்தான். திறமை யும், யோக்கியதையும் உள்ள பலர் அடங்கிய கட்சியில் மாறுபாடான ஒருவர் சேர்வது ஸ்தாபனத்தைச் சீர் குலைத்துவிடும். எனவே கட்சி சார்பில் நிறுத்தப்படும் ஒவ்வொரு அபேட்சகரும் யோக்கியதை யுடையவரா யிருக்கவேண்டும் என்ருகிறது. அபேட்சகர் எப்படி யோக்கியதை யுடையவராய் இருக்கவேண்டுமோ அப் படியேதான், அவர் சேர்ந்துள்ள கட்சியும் யோக்கியதை யுடையதாய் இருக்க வேண்டும்.

ஆளும் கட்சியைஎடுத்துக்கொள்வோம். தியாகத்தா லும், போராட்டத்தாலும் பக்குவமுற்ற ஸ்தாபனம்

7— 7741,N52 TO

அது. தகுதியின் அடிப்படையிலேயே அது ஆளும் கட்சியாய் விளங்குகிறது. அக்கட்சியின் சார்பில் ஒழுங்கினமானோர் நிற்பது சாத்தியமல்ல. சுதந்தரமடைந்த பின் தொடர்ந்து அது செய்து வந்துள்ள சேவையை மக்கள் அறிவர். வெறுங்கூச்சலுக்கும், கேளிக் கூத்துக்கும் அங்கு இடமில்லை யென்பது தெளிவாகிவிட்ட உண்மை. எனவே, வாக்காளர்கள் ஆளும்கட்சியினரை ஆதரித்தல் அவசியம்.

பொதுமக்களோடு தொடர்பு கொண்டுள்ளது நகரசபை. நகரசபை ஆளும் கட்சியினரின் செல்வாக்கில் இயங்கி வருகிறது. ஆளும் கட்சியினரால்தான் மக்கள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கான வசதிகளை அரசினரிடமிருந்து பெறமுடியும். எனவே ஆளும் கட்சியின் சார்பில் நிற்கும் நல்லவர்களைத் தேர்ந்தெடுத்து நகரத்தின் நலனைத் தேடிக்கொள்ள வாக்காளர்கள் பின்னடையக்கூடாது.

தனியார் தொழிலுக்கு உதவி

தனியார் துறைத்தொழிலுக்கு உதவி செய்ய வேண்டியதின் அவசியத்தைப்பற்றி மேடைகளில் பெருத்த அளவில் பேசப்படுகிறது. நம்நாடு வெகு துரிதத்தில் முன்னேற வேண்டும். அதற்கு அத்தியாவசியத்தேவை தனியார் துறைத் தொழில் வளர்ச்சியே. அதன் அவசியத்தை அரசினர் உணர்ந்து ஆவன செய்துள்ளது குறித்து மகிழ்ச்சியடைகிறோம். அவ்வாறு தனியார் துறைத் தொழிலுக்கு அளிக்கும் உதவியில் தாமதம் ஏற்படக்கூடாது. தாமதமற்ற உதவியால்தான் தொழிலில் ஈடுபட்டுள்ள தனியார் உத்ஸாகமும், உயர்வும் அடைய முடியும். அவர்களின் உயர்வு தொழிலின் வளர்ச்சியைப் பொறுத்திருக்கிறதென்பதையும், தொழிலின் வளர்ச்சி நாட்டின் உயர்வுக்கு ஊன்றுகோலாகுமென்பதையும் நாம் விவரிக்கத் தேவையில்லை. எனவே, அரசினர் தீர்மானித்து செயல் படுத்தி வரும் தனியார் துறைத்தொழிலுதவியில் தாமதமின்மையைக் கடைப்பிடித்தல் மிகுந்த நன்மைதரும்!

அதிசயச் சம்பவங்கள்

இந்திய பெண் கூந்தலை கத்தரித்தவருக்கு அபராதம்

லண்டனில் ஒரு இந்து யுவதியின் நீண்ட கூந்தலை கண்டு அதன்மேல் ஆசைக் கொண்டு அக்கூந்தலைத் தான் கத்தரித்ததாக ஒப்புக்கொண்டார் ஹெர்பர்ட் ஸ்கெல்டன் (59) கோர்ட்டார் அன்னருக்கு 15 பவுன் அபராதம் விதித்தார்கள். கேசத்தைக் கத்தரிக்கும்போது, அப்பெண்ணை கத்தியால் தாக்கியதையும் அவர் ஒப்புக்கொண்டார்.

உகண்டாவிலிருந்து வந்துள்ள விஞ்ஞான மாணவி குமாரி விர்பால நாராயணிபாய் படேல் (20) என்னும் யுவதியிடம் இவர் இம்மாதிரி நடந்துகொண்டுள்ளார். குமாரி படேல், மற்றொரு நபருடன் சினிமாவுக்குப் போய்க்கொண்டிருக்கையில், திடீரென யாரோ தலைமயிரை பிடித்து இழுப்பது போலத் தோன்றியதாம். அவளோடு வந்த நபர் ஸ்கெல்டனை பிடித்து விட்டார். வீட்டிற்குப்போய்ப் பார்த்ததில் ஒரு பக்க கூந்தல், பலமாகக கத்தரிக்கப்பட்டிருப்பதை குமாரி படேல் கண்டார். தலைவாரின போது இரண்டடி நீல கூந்தல் கையோடு வந்து விட்டதாம்.

———

பரலோகத்திற்கு போய் திரும்பி வந்தவர்

நிலக்கோட்டைக்கு அருகில் இருக்கும் கொடைரோடு என்ற ஊரில் பஸ் கண்டக்டர் வேலைபார்க்கும் ரங்கனதன் வயது 26 என்பவர். அவர் ஜெயமங்கலம் என்ற ஊருக்கு பஸ்ஸில் கண்டக்டராக போகும்போது சிலுக்குவார்பட்டி என்ற கிராமத்தில் மார் அடைப்பால் மயக்க முற்றாராம். உடனே

சர்க்கார் ஆஸ்பத்திரியில் அவர் சேர்க்கப்பட்டார். அங்கு அவர் மரணமடைந்தார். அன்னாரின் பந்துக்கள் அவரை அடக்கம் செய்வதற்காக மறுநாள் மாலை 3-45-க்கு மயான கரைக்குக்கொண்டு போயினர். அன்னாரின் பிரேதத்தை புதை குழியில் இறக்கிமண்ணைத்தள்ளும் பொழுது வலது கை துடித்ததாம். உடனே பந்துக்கள் புதைக்குழியிலிருந்து பிரேதத்தை வெளியில் எடுத்துவைத்தனர். 2 மணி நேரம் கழித்து அவருக்கு திடீரென உயிர் வந்துவிட்டது. அவர் கண்களைத்திறந்து மிரள மிரள விழித்து எல்லோரையும்பார்த்து, தண்ணீர் தண்ணீர் என்று கேட்டார். அன்னாருக்கு தண்ணீர் கொடுத்தார்கள். பிறகு அவர் உயிரோடு வீடுவந்து சேர்ந்தாராம்.

"தொழில்" ஆண்டு மலர்

✻

உருவாகிக்கொண்டு வருகிறது! மூவர்ண முகப்போடும், கண்கவர் வண்ண ஓவியங்களோடும், கைத்தொழில், கலை, கருத்துரை, கவிதை முதலிய அம்சங்களோடும் ஏப்ரல்மாதம் வெளிவருகிறது. விலை ரூபாய் ஒன்று.

விற்பனையாளர்கள் முன்கூட்டி தங்கள் தேவைக்குப் பதிவு செய்து கொள்ளவும்.

மானேஜர்: "தொழில்" சென்னை-3.

வ. உ. சி.
கலைக்கூடம்

(சென்னை அரசினர் உதவிப்பெற்றது)

முதல் மந்திரி

ஸ்ரீ K. காமராஜ் அவர்கள்

திறந்துவைத்து

நடைபெற்று வருகிறது

உரிமையாளர் :

R. T. கிருஷ்ணமூர்த்தி

அணுகுக :

வ. உ. சி. கலைக்கூடம்

பூந்தோட்டம்,

35/60, சந்நிதி தெரு, வடபழநி,

சென்னை.

ஹேர் ஆயில்கள்

"கே. ஜி. ராஜு"

அம்லா (ஹேர்) கூந்தல் தைலம்

சுத்தம் செய்த தேங்கா வெண்ணெய் பவுண்டு 5,

ரோஸ் சென்ட் அவுன்ஸ் 1,

சந்தன எண்ணெய் ட்ராம் 2,

நார்ஸஸ் ,, 2

ஆயில்கிரீன் (போதுமான அளவு)

செய்பாகம்

தேங்கா எண்ணெய்யில் ஆயில்கிரீன் (பச்சை) கலரை கரைத்துக் கொள்ளவும். வெண்பச்சை நிறமாய் இருக்குமாறு கவனித்துக் கொள்ளவும். அதன்பின் மற்ற சென்ட் வகைகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

ராஜா ஹேர் ஆயில்

ரேடியோ ஆயில் ஒய்ட் ஆயிலும் சம அளவில் கலந்து பவுண்டு 5

ராஜாரோஸ் அவுன்ஸ் 2½

குடிகூரா எஸ்ஸன்ஸ் ட்ராம் 1

ஆயில் ரெட் (போதுமானது)

செய்பாகம்

எண்ணெய்யில் ஆயில் ரெட் பவுடரை கரைத்துக் கொள்ளவும். அதன்பின், மற்ற சென்ட் வகைகளைச் சேர்த்துக் கொள்ளவும்.

அம்லா ஹேர் ஆயில்

வேறு முறை

சுத்தம் செய்த தேங்கா எண்ணெய் பவுண்ட்	5,
அம்லா சென்ட் (எஸ்ஸன்ஸ்) ட்ராம்	1
ரோஸ் ,, ,,	1,
ஜாஸ்மின் ,, ,,	1,
நார்ஸஸ் ,, ,,	1,
ஆயில் ரெட்கலர் (போதுமான அளவு)	

செய்பாகம்

ஆயில்ரெட்கலரை எண்ணெய்யில் கரைத்துக்கொள்ளவும். பிறகு எஸ்ஸன்ஸ் வகைகளைக் கூட்டி கொள்ளவும்.

Telegrams: Marigold
Phone : 31738.

K. Perumal Udayar

Importer, Exporter & Manufacturers' Representative

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்.

K. பெருமாள் உடையார்
55, எடப்பாளையம் தெரு,
சென்னை-3.

வாழ்ந்தபோது பிச்சைக்காரன் இறந்தபோது பணக்காரன்

லண்டனில் ஜாக் புல்லர் என்பவன் ஒரு கம்பெனியில் இரவு காவலாளியாக வேலை பார்த்து வந்தான் அவன் பரமதரித்திரன். அவன் உயிரோடு இருக்கும் வரை பிச்சைவாங்கியே பிழைத்தான். அவன் இறந்தபோது அவன் அறையில் 2,000 பவுன் ரொக்கமும், 1,300 பவுனுக்கு தபால் ஆபீஸ் சேமிப்பும் இருந்ததாம்.

பேப்ரி கேட்டர்ஸ் சங்க ஜெனரல் பாடி கூட்டம்

புது நிர்வாகிகள் தேர்வு

22—2—59 ஞாயிறு காலை 10-மணிக்கு திருச்சி முனிசிபல் சத்திரத்தில் சென்னை ராஜ்ய அயரன் ஸ்டீல் பேப்ரி கேட்டர்ஸ் சங்க ஜெனரல் பாடிகூட்டம் "தொழில்" ஆசிரியரும், ராஜ்ய அ. ஸ். சங்கத்தலைவருமான ஸ்ரீ K. பெருமாள் உடையார் தலைமையில் நடைபெற்றது.

ஸ்ரீ K. பெருமாள் உடையார்:புதுத்தலைவராய் ஸ்ரீ. M. கண்ணன் அவர்களைத் தேர்ந்தெடுக்குமாறு பிரேரேபிக்க கும்பகோணம் ஜனாப் A. இஸ்மாயில் ஆதரித்தார். தலைவர் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டபின் நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது.

தலைவர்: M. கண்ணன் (சென்னை) உபதலைவர்கள்: P. சுப்ரமண்யம் செட்டி, (சென்னை) T. P. வேலு பிள்ளை (திருச்சி) பொர்துக் காரியதரிசி: P. H. நஸிருத்தின் (திருச்சி) உதவி காரியதரிசிகள்: K. ராதாகிருஷ்ண முதலியார் (சென்னை) D. குழந்தைசாமி (கோவமுத்தூர்) A. முகமது இபுராஹிம் (கும்பகோணம்) பொக்கிஷதார்: T. M. சுப்ரமண்ய ஆச்

அட்டைப்பட விளக்கம்

பூவும், அதன் மணமும்போல் ஒன்றித்த மனநிலையில் உயிர் ஒன்ருய், உடல் இரண்டாய்த் துலங்கும் தம்பதிகள்.

புதிதாய் ஒருவரைக் கண்டு ஒருவர் மிரளுகின்ற புதுக் காதலர்கள் அல்ல இவர்கள்.

ஸ்ரீ M. கண்ணன் அவர்கள்

சென்னை ராஜ்ய அயர்ன் ஸ்டீல் பேப்ரிகேட்டர்ஸ் அசோஸியேஷன் 1959-ம் ஆண்டு தலைவர்.

சாரி, திருச்செங்கோடு. T. M. ராமையா பிள்ளை, மன்னார்குடி, A. P. வீரமுத்து ஆச்சாரி, கும்பகோணம், முகமது இஸ்மாயில், புதுக்கோட்டை.

நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்கள்

K. பெருமாள் உடையார் சென்னை
M. பார்த்தசாரதி ,,
R. அமிர்தலிங்கம் பிள்ளை ,,
T. ஏகாம்பரம் செட்டி ,,
P. K. கோவிந்தசாமி ,,
M. A. கோவிந்தசாமி ,,

A. ரத்தினம் செட்டியார் (வந்தவாசி) K. மோகன முதலியார் (வேலூர்) மாணிக்கஞ்செட்டியார் (திருவையார்) அப்துல் காதர் (திருச்சி) முகம்மது உசேன்ராவுத்தர் ,, ஆறுமுகம்பிள்ளை (சேலம்) பரமேசுவர அய்யர் (கோவை) K. P. பரசுராமபிள்ளை (பொள்ளாச்சி) M. வீராசாமி (விருதுநகர்).

ஆகியவர்கள் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாய் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பொதுக்காரியதரிசி P. H. நஸிருத்தீன் நன்றி கூற கூட்டம் இனிது முடிவுற்றது.

ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகள்

ஒரே பிரசவத்தில் 3 குழந்தைகளைப் பெற்று தாயும், சேயும் சுகமாக இருக்கிறார்கள். ஸ்ரீ வைகுண்டம் ஆழ்வார்கள் குளத்தைச் சேர்ந்த சுடலை (வயது 35) என்கிற சலவைத் தொழிலாளியின் மனைவி பாப்பு வயது 30 என்கிற பெண்ணுக்கு இரண்டு பெண் குழந்தைகளும், ஒரு ஆண் குழந்தையும் பிறந்தன. ஒரு குழந்தை வீட்டிலும், இரண்டு குழந்தைகள் ஆஸ்பத்திரியிலும் பிறந்தனவாம்.

தொழிலாளியும் முதலாளியும்

தொழிலாளிக்கும், முதலாளிக்குமிடையே ஏற்படவேண்டிய 'உறவை' தெள்ளத் தெளிய விளக்குகிருர் செல்வி. மீனுட்சி ராமச்சந்திரன். காலஞ் சென்ற ஸ்ரீ ஜகதீச அய்யர் கெஜட் பதிவில்லாத கவர்ன்மெண்ட் உத்தியோகஸ்தர்களின் சங்கத் தலைவராய் இருந்து போராடியதை

[மீனுட்சிராமச்சந்திரன்]

நாடு அறியும். தந்தையின் சோஸலிஷக்கோள்கையைஅனுசரித்து பணிபுரிய முனைந்துள்ள மீனுட்சி ராமச்சந்திரனை பாராட்டுகிறேம். அன்னுரின் தொண்டு நாட்டிற்கும் மக்களுக்கும் நல்ல பலன் தருமென்பது எமது நம்பிக்கை. ஆ—ர்.

இன்று நம் நாடு சுதந்திரமடைந்து 10 ஆண்டுகளுக்கு மேலாகி விட்டது. நாடு பல துறைகளிலும் முன்னேறி வருகிறது என்பதில் ஐயமில்லை. ஒரு நாடு முன்னேற வேண்டுமானுல் அந்நாட்டில் தொழில் பெருகவேண்டும். தொழில் முன்னேற தேவையானது ஏது என்ருல் பணமில்லை, படிப்பில்லை, தொழிலாளிக்கும் முதலாளிக்கும் இருக்கும் உறவு தான். இந்த உறவு எவற்ருலும் பிளவு படாதவாறு இருபான்மையோரும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். முன்னேற்ற வண்டியின் இரு சக்கரங்களாக விளங்குபவர்கள் தொழிலாளியும் முதலாளியும் ஆவார்கள்.

முற்காலத்தில் கல்வியறிவு கூட இல்லாதவர்கள் இந்த உறவை அன்பு என்ற "கான்கிரீட்" அஸ்திவாரம் கொண்டு பலமாகஉருவாக்கி வந்தார்கள். தொழிலாளிக்கு எஜமானரிடம் விசுவாசமும், பயமும் பக்தியும் உண்டு. ஏன்? எஜமான் பேரைக்கூட சொல்லமாட்டார்கள். அவ்வளவு பக்தி. எஜமானன் அவனையும் அவனது குடும்பத்தையும் பராமரிப்பார். இப்படி பரஸ்பர உறவு பிறரது தயவில்லாமலேயும், எழுத்தில்லாமலேயும், சட்டமில்லாம

லேயும் வெகு அற்புதமாக நடந்து வந்தது.

இன்று நாம் போதுமான கல்வி அறிவு பெற்றுள்ளோம். அரசாங்கமும் நம்முடையதாகி விட்டது. தொழிலாளிக்கென "ஷாப் அஸிடென்ட் ஆக்ட்" என்ற சட்டம் வந்திருக்கிறது. அவர்கள் 8 மணி நேரம் வேலை செய்தால் போதும் என்ற சலுகையும் அளிக்கப் பட்டிருக்கிறது. வாரம் ஒரு நாள் விடுமுறை, இன்னும் வைத்தியவசதி, பெண்களுக்கு மருத்துவ விடுதி, இன்ஷூரன்ஸ், குழந்தைகளுக்கு இலவசக் கல்வி முதலிய வசதிகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் தொழிலாளிகள் யாரையும் அநாவசியமாக வேலையை விட்டு நீக்கக் கூடாது என்று அவர்கள் யூனியன் வேறு முழக்கம் செய்கிறது. லேபர் இன்ஸ்பெக்டர் வேறு கவனித்து கொள்கிறார். இவ்வளவு வசதியும் சலுகையும் இருந்தும் தொழிலாளிக்கும் முதலாளிக்கும் மனக்கசப்பு ஏன் வருகிறது. தொழிலாளர்கள் ஏன் "ஸ்ட்ரைக்" செய்கிறார்கள் எனகவனிப்போம்.

இதற்கு மூலகாரணம் சில தொழிலாளர்கள் தங்களைப் பற்றி தாங்களே உயர்ந்து மதிப்பிட்டு கொள்வது தான். சர்க்கார் மேற்படி சலுகைகள் அளித்திருந்தபோதிலும் இதனால் முதலாளி தொழிலாளி உறவை பலப்படுத்த முடியாது. அது எப்படியெனில் ஒரு பெண்ணுக்கு பிறந்த வீட்டில் வேண்டிய செல்வம் இருந்தும், கல்யாணம் ஆனதும் அங்கிருந்தால் எப்படி நன்றாக இராதோ அப்படித்தான். மேலும் பணத்தினால் கணவனை விலைக்கு வாங்க மனைவி நினைத்தால் அது எவ்வளவு தவறோ அதே மாதிரி தான். ஒரு பெண் தன்னுடைய அன்பினாலும், அன்புப் பணியினாலும் புருஷனைத் தன் வசப்படுத்திக்கொள்கிறாளோ அதேபோல் தொழிலாளியும் தன் எஜமானனை தன் விசுவாசத்தினாலும், உழைப்பினாலும் சந்தோஷப் படுத்திக் கொள்ள முயல வேண்டும்.

"ஏட்டுச் சுரக்காய் கறிக்கு தவாது" என்றபடி சதா சட்டம் சட்டம் என்று யூனியன் கூட்டிகோஷ்டம் போட்டு முதலாளியை கோபப்படுத்தக்கூடாது. தொழிலாளர்கள் இடையே தொழிலாளி முதலாளி என்ற உணர்ச்

சியை கிளப்பி விடக்கூடாது. முதலாளிகளை அநாவசியமாக திட்டக்கூடாது. இன்று யூனியன் கூடி "ஸ்ட்ரைக்" பண்ணுவது விளையாட்டாக இருக்கும். ஆனால் நீண்ட நாட்கள் நடக்காது. வீட்டில் அடுப்பு புகையாதபோது வாய் எப்படி கூவ முடியும். சில மட்டரகமான தொழிலாளிகளின் செயலால் மனம் வெறுத்த முதலாளிகள் மில்லை மூடி விடுகிறார்கள். இப்படி நேரவிடக்கூடாது. வோட்டு காலங்களில் ஒரு கட்சியுடனும் தொழிலாளி சேரக்கூடாது.

நீங்கள் கேட்கலாம் "ஸ்ட்ரைக்" பண்ணித் தானே நாங்கள் கேட்டதை அடைய முடிகிறது என்பார்கள். ஆனால் "ஸ்ட்ரைக்" பண்ணுவது எவ்வளவு தவறு என்பது சிலருக்கு இன்னும் புரியவில்லை. ஸ்ட்ரைக்கினால் வேலை கெடுகிறது. தொழிலாளிக்கு கூலி இல்லாமல் போகிறது. நாட்டில் உற்பத்தி குறைகிறது. இவ்வளவு அனர்த்தங்களும் நேருகிறது. தொழிலாளர்கள் முதலாளியுடன் சண்டை போடலாம். அதாவது முக்கியமான ஆதாரத்துடன் கூடிய காரியமானால் நேரே போய் தீர்த்துக் கொள்ளத் தான் வேண்டும். இதற்கு எந்த ஒரு முதலாளியும் ஒப்பாமல் இருக்க மாட்டார். இதை விட்டு விட்டு ஈரை பேனாக்கி, பேனை பெருமாளாக்கி மனக்கசப்பை வளரவிடக்கூடாது.

தொழிலாளர்கள் முதலாளிகள் இருவரும் இரட்டையர்கள். ஒன்றில்லாமல் மற்றொன்று இயங்க முடியாது. நம் நாட்டின் தொழில் செல்வம் மேன் மேலும் பெருக இருவரும் ஒத்துழைக்க வேண்டுவது அவசியம். அப்போது தான் நம் நாடு செல்வமுள்ள ஒரு நாடாக திகழ முடியும். தொழிலாளிகளும் முதலாளிகளும் செய்யும் வீண் போரில் கட்சியின் பேரை இழுக்கக் கூடாது. எப்படி குழந்தை சண்டையில் பெரியவர்களுடைய பெயர் இழுக்கப்படக் கூடாதோ அதே மாதிரி தான். சர்க்கார் சட்டம் போட்டுகொடுத்திருப்பதும். தொழிலாளர்கள் சௌகர்யமாக வாழ்வதற்கே ஒழிய விதண்டா வாதம் செய்வதற்காக அல்ல. சட்டத்தைக் காட்டி பயமுறுத்தினால் முதலாளி பயப்படமாட்டார். அன்பைக் காட்டி, உழைப்பைக் காட்டி, பெர்ருள்

பெருக்கத்தை சதவீதப்படி ஆதாரத்துடன் காட்டிபோரிடுங்கள். ஜெயம் கண்டிப்பாகக் கிடைக்கும். முதலாளியும் நிச்சயமாக நீங்கள் கேட்கும் உரிமைகளை கொடுத்தாக வேண்டும்.

இதே போல முதலாளியும் பணத்திமிறினால் தொழிலாளர்களை தாறுமாறாக நடத்தக் கூடாது. அவர்களும் மனிதர்கள், அவர்களிடம் உழைப்புச் செல்வம் இருக்கிறது என்பதை உணர்ந்து கொண்டு அன்பாக நடந்து கொள்ளவேண்டும். சலுகைகளை கூடிய வரை அளிக்க வேண்டும். அதிக லாபம் கிடைத்தால் தொழிலாளிகளுக்கு "போனஸ்" வழங்கி அவர்களை மகிழ்விக்கவேண்டும். வருமான வரி கட்டுவதை விட தொழிலாளிக்கு கொடுப்பதால் ஒன்றும் குறைந்து போய் விடாது. தொழிலாளிக்கு அதிக சலுகை அளித்து பிற முதலாளிகளுக்கு ஒரு எடுத்துக் காட்டாக விளங்கவேண்டும். தன் தொழிற்சாலையில் கூடியவரை யூனியன் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் சில யூனியன் "செக்ரெட்ரிகள்" பணத்தாசையால் சதா முதலாளிக்கும், தொழிலாளிக்கும் சண்டையை கிளப்பிக் கொண்டே இருப்பார்கள். கூடியவரை தொழிலாளியின் குறையை முதலாளியே நேரில் கேட்டு நிவர்த்தி பண்ணி வைப்பது மிக்க நலம். சில தொழிற்சாலையில் தொழிலாளிக்கும் லாபத்தில் ஒரு பங்களித்திருக்கிறார்கள். இது போற்றத்தக்கது. இம்முறை முதன்முதல் இந்தியாவில் பெங்களூரிலுள்ள "மெஷின்டூல்" தொழிற்சாலையில் கையாளப்பட்டு வருகிறது.

"சாட்சிக்காரனிடம் போவதைவிடசண்டைக்காரனிடம் போவது மேல்" என்ற முதுரைப்படி தொழிலாளியும் முதலாளியும் தங்கள் சுக துக்கங்களை தாங்களே பரிமாறிக்கொள்ளவேண்டும் இதுதான் நல்லது. தொழிலாளியும் முதலாளியும் நகமும் சதையும் போல இருந்தால் தான் நம்நாடு அபிவிருத்தி அடைய முடியும். இல்லாவிட்டால் எவ்வளவு ஐந்தாண்டு திட்டம் வந்த போதிலும் முன்னேற முடியாது. வாழ்க தொழிலாளி, வாழ்க அவரது முதலாளி.

முன் கதை...........

உறுப்பினர் * * * *

லலிதா, கணேசன், சுந்தரம், சுசீலா, சாந்தா.

மாஜி அரசாங்க ஊழியரும், தற்போதைய சரஸ்வதி மில் மானேஜருமான சுந்தரத்தின் மகள் லலிதா கணேசனை காதலிக்கிறாள். தாய் மாமன் சிவகுமார் அவர்கள் காதலில் குறுக்கிடுகிறான். பூங்காவில் காதலர்களைக் கண்ட சிவகுமார் சீற்றமடைந்து நிந்திக்க கணேசன் அவனைத் தாக்கி வீழ்த்துகிறான். அந்தச் சமயம் சுந்தரம் அங்கே வர லலிதா மாமன்மேலேயே குற்றத்தை சுமத்துகிறாள். கோபமடைந்த சிவகுமார் சுந்தரத்தை நிந்தித்துவிட்டு வெளியேறுகிறான். அதன்பின் லலிதாவை வெளியே செல்ல சுந்தரம் அனுமதிக்கவில்லை. அந்நிலையில்.........

ஓர் நாள் கணேஷ் திடீரென்று சுந்தரத்தின் வீட்டில் நுழைந்து லலிதாவிடம் கடிதமொன்றை கொடுத்து விட்டுப் போகிறான். அதற்குப் பதிலெழுதி அப்போது அங்கே வந்த அவன்தங்கை சாந்தா மூலம் அனுப்புகிறாள். அதைப் படித்ததும் கணேஷ் நிலை தடுமாறி விடுகிறான்............

* * * * *

அடுத்து நடப்பனவற்றை தொடர்ந்து படியுங்கள்:

"சாந்தா! நீ கவலைப்படவேண்டாம். சிறு காயம்தான். கண்ணாடியை துடைத்துக்கொண்டிருந்தேன். அது ஆணி கழன்று கீழே விழுந்து உடைந்து விட்டது. ஓர் சிதள் எப்படியோ என் நெற்றியில் தைத்துவிட்டது. அதை வெளியில் பிய்த்து எடுத்தேன். அதனால்தான் நெற்றியில் காயமேற்பட்டிருக்கிறது" என்று சாந்தாவை சமாதானம் செய்தான் கணேசன். சாந்தாவும் கீழே இறங்கினாள்.

லலிதாவின் திருமணத்தைப்பற்றி சிந்திக்கத் தொடங்கினான். வாழ்க்கைக்கு ஏற்ற மனைவி என்று அவன் உறுதி கொண்டாலும் வீட்டில் எப்படி சம்மதிப்பார்கள் என்ற சந்தேகம் வேறே குறுக்கிட்டது. பேரி செட்டியார் வகுப்பில் தோன்றியவன் கணேசன். முதலியார் பெண்ணை மணந்து கொள்ள தன் பெற்றோர் உரிமை கொடுப்பார்களா? பரம்பரை பரம்பரையாய் வரும் குலப்பெருமை அழித்துவிட மனம் வருமா? அவர்களுடையதும் வைதீகக் குடும்பம். வ. ந. சொக்கலிங்கம் செட்டியாரை தெரியாதவர்கள் யாருமிருக்கமாட்டார்கள். அப்பேர்ப்பட்டவரின் பிள்ளை குறுக்கு வழியில் ஓர் பெண்ணை மணந்துக் கொள்கிறான் என்றால் அவமானமில்லையா? அப்படி விரும்பினாலும் சுந்தரம்தான் தன் பெண்ணை தாராளமாய் கொடுத்து விடுவாரா? அவரும் பழுத்த வைதீகராச்சே!

16 மனப் போராட்டம்

ஓர் நாள் இரவு; மணி எட்டு இருக்கும். கணேசன் குடும்பத்தார் யாவரும் வீட்டில் இருந்தார்கள். கணேசன் தன் அறையைவிட்டுக் கிளம்பினான். உள்ளத்தில் இருக்கும் எண்ணத்தை வெளியிடத் துடித்தான். திருமண பிரச்னையை முடித்துவிட வேண்டுமென்பது அவன் ஆவல்; லலிதாவை மணந்து ஆகவேண்டும். அவளை மணமுடிப்பதென்றால் அப்பா, அம்மாவின் மனம் சம்மதத்தை பெற வேண்டும். அவர்களிசைந்தால், லலிதா தன்னுடையவள் தான். வாழ்க்கையிலே நல்ல வசீகரம் ஏற்படும். "என்னை அருமையாய் பெற்று வளர்த்தவர்கள் என் இஷ்டத்திற்கு

மாருகவா நடக்கப்போகிருர்கள்? ஆம்! அவர்களே தான் எனக்கும் லலிதாவுக்கும் திருமணம் செய்து வைக்கப்போகிருர்கள்!" என்று திடப்படுத்திக் கொண்டான். ஆனல் அவன் கால்கள் மாடிப் படியை விட்டு மறு அடி எடுத்து வைக்க மறுத்துவிட்டன.

"அறிவீனனே நில்! என்ன துணிவு உனக்கு? நீ எதிர் பார்ப்பது நடந்துவிடுமா? நீ ஆணவத்தின் எல்லையில் அடியெடுத்து வைத்துவிட்டாயே! ஒழுக்கம் தவறி 'காதலோ, காதல்' என்று காரிகைக்காக புலம்புகிருயே! வெட்கமில்லையா உனக்கு? உன் அயோக்கியத் தனத்தை உன் அப்பா அம்மாவிடம் சொல்லப்போகிருயே! அவர்கள் தான் உன்னை மதிப்பார்களா?........." இவ்வாறு அவன் மனம் இடித்துக் கூறியது. அவன் திகைத்தான்.

"ஆம்! அதில் சந்தேக மென்ன? உன் அப்பா நீதிமான்! அவர் உன்னை நல்வழிக்குத்தான் கொண்டு செல்வார்! அவரே மறுத்துரைக்கும் அளவுக்கு நிலைமையை சிருஷ்டித்து விடாதே!......"

"அடபாவி! குலப்பெருமையை அழிக்க புல்லுருவியாய் தோன்றிவிட்டாயே! திருமணமாம் திருமணம்! நாணமில்லாமல் சொல்லப் போகிருயோ? இதற்குத்தானு உன்னை பட்டதாரி படிப்புவரை படிக்க பணத்தை வாரி இறைத்தார் உன் அப்பா! நாலு பேர் காதில் கேட்டால் உன் அப்பன் முகத்தில் காரிதான் துப்புவார்கள்!ஏன் ரோட்டில் தலைநிமிர்ந்து போகிருன் என்ற எண்ணமா உனக்கு? உன் குலத்தின் கௌரவம் அழிந்துவிட்டால் யாருமே மதிக்கமாட்டார்களே! மடத்தனமாய் நடக்காதே போ உள்ளே".........

கணேஷ்! சிறுபிள்ளையா நீ! கொஞ்சமாகிலும் உன் அந்தஸ்தை யோசித்துப் பார்க்கவேண்டாமா? நீ எங்கே?— அந்த லலிதா எங்கே? உன்னை காதலித்தது போல் வேறு ஒருவன் அழகாய் இருக்கிருன் என்ருல் அவனையும் காதலிக்க மாட்டாள் என்று நீ எப்படி நினைக்க முடியும்? மரபை மறந்துவிடலாமா? வேண்டாம் கணேஷ்! வேண்டாம்!......"

கோழை உள்ளம் படைத்தவன்! நெஞ்சில் ஈரமில்லா உன்னை ஏன் தான் பெற்றெடுத்தாளோ உன் அன்னை? உன்

அன்னை ஓர் தமிழணங்கு இல்லையா?......கணேஷ்! எதையும் எண்ணிப்பார்த்துச் செய். புதுமைத் தளிரை பிடித்தாய்! அது கசங்கக் கூடாது. அவள் உன் மையலில் சிக்கியது உண்மை. கருத்தை இழந்தாள் அவள், கண்ணியத்தைத் துறந்தாள், வெறியனை எதிர்த்தாள், வேண்டிய பொய்ச் சாக்குகளை பெற்ற தகப்பனிடத்திலேயே வீசினாள். அவள் சாகஸக்காரி! சமர்த்தி! அவள் உத்தமியுங்கூட. எதையும் பொருட்படுத்தாமல் உன்னை திருமணம் செய்ய காத்திருக்கிறாளே அவளல்லவோ தமிழ் வீராங்கனை! ஈன்றெடுத்த தாய் புண்யவதி! நீயும் வீரமாய் நடந்து கொள்வாய் என்று தான் உன்னை நாடினாள்! ஆனால், நீ ஒரு பேடியாய் இருக்கிறாயே என்று தான் வியக்கிறேன். மனிதன் அழகாக இருந்துவிட்டால் போதுமா? படித்துப் பட்டம் பெற்று விட்டாலும், பணத்தின் அரியாசனத்தில் வீற்றிருந்தாலும் பெருமை என்ன இருக்கிறது? நாகரிக உலகத்தில் நீயும் ஒரு நச்சுப் பாம்பாக வாழ்கிறாயே! நீ தானா அவள் கண்களுக்கு விருந்தளிக்கவேண்டும்? அவள் வாழ்வை கெடுத்தாய்—வாழப்போகும் உரிமையையும்

பறித்தெடுத்துக்கொண்டாய்! சண்டாளன், சதிகாரன் என்ற பட்டப்பெயர் பூட்டிக்கொள்ளவா எதிர்பார்க்கிறாய்? அவள் பெண்—கண்ணீர் விட்டழுதால் நீ வாழவே முடியாது! ஓடு!...ஊம்...ஏன் விழிக்கிறாய்?...போ சீக்கிரம்...... போ......அவள் திருமணத்தை நிச்சயப்படுத்து!

இவ்வாறெல்லாம் அவன் பேசியது, நேரிலே யாரோ நின்று பேசுவது போன்றே தொனித்தது. மனம் பேசுமா (?) என்ற சந்தேகம் எழுந்தது அவனுக்கு. ஏன் பேசாது? அப்போதுதான் பேசியதை உணர்ந்தானே.

கணேஷ் திகைத்தான்; அவன் சிந்தனை மேலும் கீழுமாக உருண்டு கொண்டிருந்தது. உண்மை யாரிடத்தில் இருக்கிறது? எந்த திசை நோக்கினும் மனம் பலவிதமாக நையாண்டி செய்கின்றது. அவன் முகத்தில் பயங்கரம் பிரதி பலித்தது. தள்ளாடியபடி தன் அறை நோக்கிச் சென்றான். குப்புற படுத்து விட்டான் கட்டிலின் மீது. முகத்தை அப்படி இப்படிக்கூட திருப்பாமல் விழுந்து கிடந்தான்.

அவன் பிரமை கொண்டவன்போல் ஏதேதோ உளறிக்கொண்டிருந்தான். மணியும் ஒன்பது ஆகியது. "கணேசா!... கணேசா!" என்று அவன் தாய் வேதவல்லி கூப்பிட்டுக்கொண்டே மேலே வந்தாள். அவன் அறையில் யாருடனோ பேசிக் கொண்டிருக்கிறான் என்று எண்ணி சில நிமிடங்கள் வெளியில் நின்றிருந்தாள். ஆனால் அவன் வார்த்தைகள் புதுப் புது ரூபத்தில் கிளம்பிக்கொண்டிருந்தன. திடுக்கிட்டாள். அவள் தலையை கொஞ்சம் உள்ளே நீட்டிப் பார்த்தாள். ஒருவரும் இல்லை. கணேசன் தான் கட்டிலில் புரண்டுக் கொண்டிருந்தான்.

'கணேசா' என்று குரல் கொடுத்தபடி உள்ளே சென்று அவனை தட்டி யெழுப்பினாள். அலண்டு எழுந்தான் கணேசன். எதிரிலே தன் தாய் நிற்பதைப் பார்த்தான். "என்னம்மா? இதற்குள்ளாக எழுப்பி விட்டீர்களே" என்று முனகிக் கொண்டே கட்டிலைவிட்டு கிழிறங்கினான்.

"எழுப்பாமல் உன் உளறலை கேட்டுக் கொண்டிருக்க சொல்லுகிறாயா? ஊம்! எழுந்திருடா சாப்பிட" என்று மிடுக்காக சொல்லிவிட்டு கீழே வந்து விட்டாள்.

கணேசனும் கீழே இறங்கிச் சென்றான். அவன் என்று மில்லாவிதமாய் அன்று வாடிய முகத்துடன் வாயடைத்துப் போய் தாயைத் தொடர்ந்தான். அவனது எண்ணக் குமுறலை எப்படி வெளியிட முடியும்? எப்படியோ சாப்பாட்டை முடித்துக்கொண்டு திரும்பினான்.

நாட்கள் ஐந்து கடந்தன. லலிதா கணேஷ் இருவரிடையில் எவ்வித கடிதப் போக்குவரத்தும் இல்லை. கணேசனும், லலிதாவின் கடிதத்தைப் பார்த்ததிலிருந்து அவள் திருமண சம்பந்தமாய் திட்டம் வகுத்துக்கொண்டிருந்தான். எத்தனையோ மனக் கோட்டைகள் கட்டி வந்தாலும் காரிய சித்திக்கானதாய் எதுவும் தோன்றவில்லை. அவன் லலிதாவின் வீட்டு தெரு வழியாக காரை ஓட்டிச் செல்லுகிறான்—அவள் வீட்டின் முன் ஹாரன் சத்தத்தையும் கிளப்பி பார்க்கிறான். அவளாகவாவது தன் வீட்டிற்கு வருவாள் என்றும் எதிர்பார்க்கிறான். ஆனால் லலிதா அவன் கண் திருஷ்டியிலே படவில்லை—வரவுமில்லை. இதனால் அவனுக்கு பல சந்தேகங்கள் தோன்றின. இரவோடு இரவாக லலிதாவை எங்கேனும் கடத்திச் செல்லவும் திட்டமிட்டான்.

கடிதத்தை எடுத்தான். தன் நிலையை எழுதி சாந்தா மூலமாக அனுப்பி வைத்தான்.

17 காதல் கடிதமும், வேதனை உள்ளமும்

சாந்தா கடிதத்துடன் லலிதா வீட்டிற்கு சென்றிருந்தாள். அன்று வீட்டில் லலிதா இல்லை. சுசீலா அம்மாள் தன் மகள் லலிதாவை அழைத்துக்கொண்டு யார் வீட்டு கலியாணத்திற்கோ போயிருந்தாள். வீட்டில் சுந்தரம் தினசரி பேப்பரை படித்துக் கொண்டிருந்தார். சாந்தா உள்ளே சென்றதும் சுந்தரத்தைத்தான் பார்த்தாள். சாந்தாவின் கையிலிருந்தக் கடிதத்தைப் பார்த்ததும் சுந்தரம் "வாம்மா சாந்தா!... என்ன விஷயம்?... லலிதா வெளியில் போயிருக்காளே! பகல் இரண்டு மணிக்குத்தான் வருவாள்" என்றார்.

M. சுப்ரமண்யம் & பிரதர்ஸ்

(ஞானம்பிகா பிராண்டு)



ஸ்டீல் டிரங்க்கு வியாபாரம்

மூர் மார்கெட்,

சென்னை-3.

(அரசாங்க அங்கீகாரம் பெற்றபேப்ரிகேட்டர்கள்)

எங்களிடம் கைதேர்ந்த ஆட்களைக்கொண்டு தயார் செய்த நல்ல ஸ்டீல் சூட் கேஸ், கேபின், பிலிம் பாக்ஸ், இன்னும் இதர டிசைன்கள் ஆர்டரின் பேரில் மொத்தமாகவும் சில்லரையாகவும் கிடைக்கும்.

ஞானம்பிகா பிராண்டு ஸ்டீல் டிரங்க்கு பெட்டிகளை உபயோகியுங்கள்.

பேக்டரி : நெ. 52, சைடன்ஹாம்ஸ் ரோடு, சென்னை-3

ஷாப் : நெ. 15- பிளாக்கு மூர்மார்கெட், சென்னை-3.

இங்ஙனம்.

M. சுப்ரமண்யம் அண்டு பிரதர்ஸ் (பார்ட்னர்ஸ்)

M. கோவிந்தசாமி

M. ராதாகிருஷ்ணன்

"சரிங்க, இந்தக் கடிதத்தை என் அண்ணு கொடுத்தனுப்பினுர் லலிதாவிடம் கொடுக்கச் சொல்லி! நீங்களே கொடுத்து விடுங்கள் அவளிடம்" என்று கவரை கொடுத்தாள் சாந்தா!

"என்ன? லலிதாவுக்கு உன் அண்ணன் கடிதம் கொடுத்தனுப்பினுரா?" என்று ஆச்சரியத்தோடு கேட்டார் அவர்.

"முன்பு நீங்கள் என் அண்ணனுக்கு மில் விஷயமாக கொடுத்து அனுப்பிய கடிதத்திற்கு இது பதிலாய்த்தான் இருக்கும்" என்ருள் அவள்.

சுந்தரம் திகைத்தார். மில் விஷயத்தைப்பற்றி அவனுக்கு கடிதம் எழுதவேண்டிய அவசியம் என்ன இருக்கிறது? இதில் ஏதோ சூது அடங்கி யிருக்கவேண்டும் என்று மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, "ஆமாம்! அதற்குப் பதில் கொடுத்தாரா உன் அண்ணன்?" என்று கேட்டார் அவர். அதற்கு சாந்தா ஆமாம் என்று கூறிவிட்டு திரும்பி விட்டாள்.

சாந்தா வெளியில் சென்றதும் கவரை பிரித்து படித்துப் பார்த்தார். அவர் தலை சுழன்றது. படிக்க திகைப்பு அதிகரித்ததேயன்றி குறையவில்லை. கடிதத்தை கையில் வைத்துக் கொண்டே கூடத்தில் அப்படியும் இப்படியுமாக உலாவிக் கொண்டிருந்தார். அவர் முகம் வெளிறிட்டிருந்தது அப்போது. மீண்டும் அந்தக் கடிதத்தை படித்தார். பின் வருமாறு எழுதப்பட்டிருந்தது.

அன்புள்ள லலிதாவுக்கு,

உன்னுல் உருக்குலைந்து தவிக்கும் கணேசன் எழுதும் விருபமாவது,

"நீ அனுப்பிய கடிதம் சாந்தாவின் மூலம் இடைக்கப் பெற்றேன். உன் பெற்ருேர் உன்னை சிறைவாசம் செய்து வைத்திருப்பதைக் கண்டு என் மனம் வேதனைப்படுகிறது. அன்று பார்க்கில் உன் மாமனுல் ஏற்பட்ட கோளாறிலிருந்துதான் நம் காதல் பாதையில் உன் அப்பா முள் வேலியாய் குறுக்கே புகுந்து விட்டார். எத்தனையோ நாட்கள் மாலை வேலையில் மலர்ச் சோலையில் இன்புற்றிருந்தோம். அந்த இன்பத்தை

உன் அப்பா தட்டிப் பறித்து எறிந்து விட்டார். இரு ப்பினும் வீட்டில் உன்னை சந்தித்து கடிதம் கொடுத்து வந்ததிலிருந்து பன்முறை உன் வீதி வழியாக காரை ஓட்டி வந்துள்ளேன். அப்போதெல்லாம்கூட உன்னை என்னால் பார்க்க முடியாமல் போய்விட்டது. நிற்க, நம் திருமணம் நடைபெறவேண்டிய காலம் சீக்கிரத்தில் தான் இருக்கிறது. அதற்காக வேண்டிய வழிகளை வகுத்து விட்டேன். ஆகையால் மறுமுறை நாம் சந்தித்து முடிவை உறுதிபடுத்திக்கொள்ளலாம் என்பது என் அபிப்பிராயம்.

இன்று இரவோ பதினைந்தாம் பிறை. வானவீதியில் முழு நிலாவின் பவனியைப் பார்த்து ரசிக்கலாம். இன்று நான் துணிந்துதான் இருக்கிறேன் உன்னை அழைத்துச் செல்வதற்காக. என் உயிரை விட உன்னையே பெரிதாய் மதிக்கிறேன்! இன்று இரவு 11 மணிக்கு என் காருடன் உன் வீட்டெதிரே வந்து நிற்கிறேன். நீ தயாராய் காத்திரு. எதற்கும் நீ அஞ்சவேண்டியதில்லை. நாம் வாழப் பிறந்திருக்கிறோம். சிறிது நேரம் உல்லாச தென்றலில் ஆனந்தமாய் உலாவிவிட்டு திரும்பலாம். நானே உன்னை வீட்டில் கொண்டு வந்துவிட்டு விடுகிறேன்''.

கள்ள நாடகம் வெளியாகி விட்டது. கடிதத்தைவிட சுந்தரத்திற்கு வேறு என்ன வேண்டும்? கையும் களவுமாக பிடிபட்டு விட்டார்கள் தன் மகளும், அவன் காதலனும் கடிதத்தின் மூலம். அன்றொரு நாள் சிவகுமாரன் கடிதம் எழுதியதும், அமரநாத் பார்க்கில் அவன் உரைத்ததும் உண்மைதான் என்று அவர் மனத்தில் தோன்றியது. சிந்தனை மேலும் வேலை செய்யத் தொடங்கியது. மகளின் போக்கை சோதனை செய்வதற்காக அந்தக் கடிதத்தை லலிதாவின் அறையில் கொண்டுபோய் போட்டு விட்டார் சுந்தரம்.

கலியாணத்திற்கு சென்றிருந்த சுசீலாவும், லலிதாவும் திரும்பி வந்தார்கள். லலிதா மடமடவென்று மாடிமீது

Sree Jayalakshmi & Co.,

MAKERS OF CANE FURNITURE

14, ராயப்பேட்டை ஐரோடு, : : மைலாப்பூர், சென்னை-4.

எந்த விதமான உபயோகத்துக்கானாலும் சரி, எப்படிப்பட்ட புது டிசைன்களாக இருந்தாலும் சரி; அவைகளை உறுதியான நல்ல பிரம்புகளைக்கொண்டு, நீடித்த உழைப்பு தரும்படி தயார் செய்து, அழகான கண்ணைக் கவரும் பல நிற இனாமல் வர்ணங்களினால் அலங்கரித்து குறித்த நேரத்தில் டெலிவரி செய்கிறோம்.

வெளியூர் ஆர்டர்கள் அடிக்கடி கவனிக்கப்பட்டு நேரம் தவறாமல் புக் செய்யப்படும்.

ரயில் பிரயாணத்தில் சாமான்கள் சேதம் அடையாமல் இருக்க உத்திரவாதத்துடன் பேகிங் செய்கிறோம்.

உள்ளூர் நபர்கள் ஒரு முறை எங்கள் கம்பெனிக்கு விஜயம் செய்யக் கோருகிறோம்.

மற்ற விபரங்களுக்கு இன்றே எழுதவும்.

உரிமையாளர்,

K. N. ராஜன்.

ஏறி தன் அறையைத் திறந்தாள். கதவைத் திறந்ததும் கண்ணெதிரே அந்தக் கடிதம் தெரிந்தது. அதை எடுத்து வைத்துக்கொண்டாள். கவர் கிழிப்பில்லாமல் தான் இருந்தது. கீழே ஓடி வந்தாள். "அப்பா! என்னை தேடிக்கொண்டு யாராவது வந்தார்களா?" என்றாள். அவள் பேச்சில் அங்கலாய்ப்பு கலந்திருந்தது.

"வந்தார்கள்...வந்தார்கள்! உன் சிநேகிதி சாந்தாதான் வந்தாள். ஏதோ கடிதம் என்றாள். உன் அறையில் போடும்படி சொன்னேன். போட்டாளோ என்னவோ! உடனே போய் விட்டாள்" என்றார் ஒன்றும் அறியாதவர் போல.

அப்போதுதான் அவள் உள்ளம் சமாதான மடைந்தது. "கடிதத்தை அப்பா பார்க்கவில்லை, தப்பித்தேன்" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டாள். கடிதத்தை பிரித்து படித்தாள் தன் அறையில். லலிதாவுக்கு உள்ளூர ஆனந்தம். ஆனால் இரவில் வெளியில் போவதென்றால் லேசா? விபரீதம் விளையாடுமே! 'சே, அவரே துணிந்து விட்டாரென்

ருல் நான் என்ன விதி விலக்கா?' என்று இறும்பூதெய்திஞள்.

18 ஓடப்பார்த்தனர்; உபத்திரவத்தில் சிக்கினர்

அன்று இரவு. வீதியில் அமைதி குடிகொண்டிருந்தது. சுவர் கடிகாரம் 'டக்...டக்...டக்' என்று பதினொன்று அடித்து நின்றது. கணேசன் வருகைக்காக மாடியில் உலாவிக்கொண்டு அவனை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள் லலிதா. கூடத்தில் படுக்கவேண்டிய சுந்தரம் அன்று அறையினுள் படுத்துக் கொண்டிருந்தார். ஆனால் அவர் உறங்கவில்லை.

சந்தடி செய்யாமல் காரை கொண்டுவந்து நிறுத்தினன் கணேசன். ரேழியில் அவன் வரவை எதிர்நோக்கியிருந்த லலிதா காரைப் பார்த்துவிட்டாள். அவள் மனம் பம்பரம் போல் சுழன்றது. சந்தடி செய்யாமல் அடிமேல் அடி வைத்துக்கொண்டு மாடியை விட்டு கீழே இறங்கி வந்தாள். சுற்று முற்றும் துருவித் துருவிப் பார்த்தாள். கூடத்தில் யாரும் இல்லாததால் கொஞ்சம் தைரியமேற்பட்டது. இருப்பினும் அவள் உடல் நடுக்கங்கொண்டிருந்தது என்ருல் மிகையாகாது.

லலிதா அமைதியாக உள் தாளை திறந்துகொண்டு வெளியில் வந்தாள். இவ்வளவையும் கவனித்துக்கொண்டிருந்த சுந்தரம் சுசிலாவை எழுப்பிக்கொண்டு பின் தொடர்ந்து வந்தார். லலிதா செல்லும் வேகத்தில் தெருப் பக்கம் தாள் போட மறந்துவிட்டாள். காரில் ஏறிக்கொண்டாள். கைகள் படபடவென்று அடித்துக்கொண்டன. தன் தாவணியால் முகத்தை மூடிக்கொண்டாள். கணேசன் வண்டியை கிளப்பினன். இதற்குள் இருவரும் தெருப்புறம் வந்துவிட்டார்கள். "நிறுத்து வண்டியை" என்று அதட்டிய படி வண்டிமுன் ஓடினர் சுந்தரம். சுசிலாவும் பின் தொடர்ந்தாள். கார் அந்த இடத்தைவிட்டு நகரவேயில்லை. எதிரே மதில் சுவர் எழுப்பினாற்போல் நின்று விட்ட சுந்தரத்தை மீறி எப்படி காரை ஓட்ட முடியும்? காரைவிட்டு கீழிறங்கி

ஞன் கணேசன். பீதியால் உடல் நடுங்க லலிதாவும் கீழி றங்கினுள்.

சுந்தரத்தைக் கண்டதும் லலித்தாவிற்கு தூக்கி வாரிப் போட்டுவிட்டது. அவள் மின்னலால் தாக்கப்பட்டவள் போல் தன்னுணர் விழந்து நின்று தடுமாறினுள். ஒரு விநாடியில் அவர்கள் கட்டியிருந்த மனக்கோட்டை தகர்ந்து விட்ட அதிர்ச்சியை அவளன்றி வேறு யார் அறிவார்? எங்கே நிற்கிறேம், என்ன செய்கிறேம் என்ற உணர்ச்சி யற்று நின்ற அவனை நோக்கி தாவியோடி வந்தாள் சுசீலா.

லலிதாவின் கூந்தலைப் பிடித்து இழுத்தாள் சுசீலா. சுந்தரம் கணேசன் சொக்காயைப் பிடித்துக்கொண்டே உள்ளே வந்தார். கணேசன் எதிர்ப்பைக் காட்டவில்லை. செயலற்றவன் போல் அவர் இழுத்தபடி போனுன். சுந்தரம் ஆத்திரம் தீரும்வரை 'பளார் பளார்' என்று கணேசன் கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். அவன் பக்கத்திலே லலிதாவை கொண்டு போய் நிறுத்தினுள் சுசீலா.



கோடம்பாக்கம் வ. உ. சி. கலைக் கூட துவக்க விழாவின்போது முதன் மந்திரி காமராஜ் பேசுகிறுர்.

சுசிலாவுக்கு பீறிட்டு எழுந்தது கோபம். லலிதாவின் முகத்திலே மும்முறை காரித் துப்பினாள். அவள் கை ஊறல் எடுத்தது போலும், கண்களை உருட்டிக்கொண்டு "துரோகிப் பயலே" என்று அவன் கன்னத்தில் ஓங்கி அறைந்தாள் சுசிலா! இது ஓர் மாது செய்யக்கூடிய வேலையல்லத்தான். உரிமைப்பொருளை அபகரித்துவிட்ட அன்னியனிடம் எந்த மாதும் இப்படிதான் நடந்து கொள்ள முடியும்.

"நிறுத்துங்கள்! ஏன் அவரை அடிக்கிறீர்கள். அவர் மீது குற்றமில்லை. என் இஷ்டத்தினால்தான் அவர் இங்கு வந்தார். அவரை அடிக்க உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது? நான் உங்கள் மகள். என்னை என்னவேண்டுமானாலும் செய்துகொள்ளுங்கள்" என்றாள் லலிதா. கணீரென்ற அவள் பேச்சு தாய் தந்தையரை அதிர்ச்சியடையச் செய்து விட்டது.

" கேட்டீர்களா, உங்கள் மகள் பேசும் பேச்சை! திருட்டுப் பையனுக்கு பரிந்து பேசக்கூட துணிந்து விட்டாள். நல்லா கேளுங்கள்! ரஸித்துக் கேளுங்கள்! ஒரே யொரு பெண் தான் என்று செல்லங் கொடுத்து வள்ர்த்தீர்களே

பிளாக்குகள் ?

ஆப்டோன், லைன், மூவர்ண பிளாக்குகள்,
ரப்பர் ஸ்டாம்புகள் திறமையாயும், நீண்டகால
அனுபவத்தின் பேரிலும் தயாரிப்பவர்கள்.

"தொழில்" பத்திரிகையில் காணும் பிளாக்குகள்
யாவும் சன்பிராஸஸில் தயாரித்தவையே!
உங்கள் தேவைக்கு அணுகுங்கள்

சன் பிராஸஸ்

220/221, வால்டாக்ஸ் ரோடு,

சென்னை-3.

அதற்கு இது படிப்பினை! இந்த நாடகத்துக்கு எத்தனை நாட்கள் ஒத்திகை செய்திருந்தார்களோ...பாவி! பெண்ணு இவள்" என்றாள் கடுகடுத்த பேச்சில்.

லலிதா பேசிய வார்த்தைகள் சுந்தரத்தின் கோபத்தைத் தூண்டியது. அவர் முகத்தில் ரௌத்திராகாரமான கோபம் பொங்கி எழுந்திருந்தது. "குலத்துரோகி! எதிர்த்துப் பேசவும் துணிந்து விட்டாயே! அவனுக்கும் உனக்கும் என்ன உரிமை யிருக்கிறது? நீயே தேடிக் கொண்ட மாப்பிள்ளை யாயிற்றே யென்று சப்பை கட்டு கட்டவா துணிந்து விட்டாய்? சீ நாயே! வெட்கமில்லை உனக்கு? காலேஜ் படிப்பு படித்தால் தானே மாப்பிள்ளை தேடிக் கொள்ளும் தைரியம் உண்டாய்விடுமா? என் கௌரவத்தையே அழித்துவிட்டாயே! காதல்...காதல்...காதல்! இந்தக் காதல் பெற்ற தாய் தகப்பனுக்கு துரோகம் செய்யவா சொல்லுகிறது? ஆம்; உன் மீது குற்றமில்லை. உனக்கு இவ்வளவு உரிமை கொடுத்து வைத்திருந்தேனே என்னைத்தான் நொந்துக் கொள்ளவேண்டும்! இவ்வளவு நாட்கள் நீ நடத்திய காதல் திருவிளையாடல்கள் அனைத்தையும் சாந்தா கொடுத்த கடிதம் எடுத்துக் காட்டிவிட்டது.

நம்பிக்கை இழந்தாய்!—நாடோடியாய் திரிந்திருக்கிறாய்! என் குலப் பெருமையை குழி தோண்டி புதைத்துவிட்டாய்! உன் அறிவை இழந்து அந்த அயோக்கியனுடன் கொம்மாளம் அடித்து வந்திருக்கிறாய்! நீ குடும்பப் பெண்ணல்ல! கேவலம், மிருக உணர்ச்சியில் வெறிகொண்டு அலையும் பேய் நீ! "லலிதா, இந்தத் துரோகியை நீ மணக்கவே முடியாது! அவன் மீது இருக்கும் ஆசையை இன்றோடு விட்டொழித்து விடு" என்றார் சுந்தரம்.

"அப்பா! உங்களுக்கு பிடிக்கவில்லை யென்றால் கண்டபடி பேசி விடுகிறதா? எனக்கேற்ற கணவனை நான் தேர்ந்தெடுத்து விட்டதில் தாங்கள் ஏன் ஆத்திரப்படவேண்டும்? எங்கள் அன்பு எல்லை கடந்து விட்டது! திருமணத்தை முடித்துக் கொள்வதாய் நாங்களே முடிவு செய்து கொண்டோம். எங்கள் காதலை வெட்டி சாய்க்கவேண்டாம்!"

"என்ன? திருமணத்தைப்பற்றியும் முடிவா செய்து கொண்டீர்கள்? வெட்கம்! "லலிதா! நீ அறிவை இழந்து பேசுகிறாய்!"

"இல்லை. என் அறிவை இழக்கவில்லை. அவரைப் பாருங்கள். குணசீலர்; அவருக்கு அழகில்லையா? அந்தஸ்தில்லையா? பங்களா வாசம்; படிப்பு, கார். அவர் பஞ்சத்து ஆண்டியல்ல, பணக்கார சீமானின் செல்வக் குமாரர். அவைகளுக்காக நான் அவரை மணக்க விரும்பவில்லை. குணசீலம் தான் எனக்கு பெரிது! அவரை நான் கணவனாக ஏற்றுக்கொள்வதில் தவறென்ன இருக்கிறது?" என்றாள் லலிதா. அவள் பேச்சு விறுவிறுப்பை தூண்டியது.

என்ன துணிச்சலான பேச்சு! "லலிதா! சுந்தரம் உயிர் உள்ளவரை ஜாதிக் கட்டுப்பாட்டை கடந்தா செட்டிப் பையனை மணக்க விடுவான்? முடியவே முடியாது! லலிதா நீ காண்பது பகற்கனவு! உன் கனவு பலிக்குமென்று எதிர்பாக்கிறாயா? செட்டிப் பையனை நீ அடைய எண்ணிவிட்ட குற்றத்திற்காக இனி வீட்டில் உனக்குச் சிறைவாசம்தான்! உன் மனம் போல நீ எப்படி அவனை திருமணம் செய்துக்கொள்ளப் போகிறாய் என்று பார்க்கிறேன்" என்றார் சுந்தரம்.

"அப்பா!" என்றாள் லலிதா.

"சீ நாயே! போ உள்ளே" என்று எட்டி உதைத்தார் சுந்தரம். இது அவர் வாழ்நாளிலே புது அனுபவம்.

உதைத்த வேகத்தில் வாசற்படியைக் கடந்து உள்ளே வந்து விழுந்தாள் லலிதா. கணேசன் "லலிதா......லலிதா" என்று கத்தினான். சுந்தரத்திற்கு கோபம் எல்லை மீறி விட்டது. "லலிதாவா! உனக்கென்ன சொந்தமடா அவள்" என்று மீண்டும் அவன் கன்னத்திலே அறைந்த தோடில்லாமல் நெட்டியும் தள்ளினார்.

மாற்றுவழி தெரியாது திகைத்த கணேஷ் வண்டியில் ஏறி உட்கார்ந்து விட்டான். காரை ஓட்ட ஆயத்தம் செய்து ஹாரன் கொடுத்தான். அதுவரை சுந்தரம் தெருவாசற்படியிலே நின்று கொண்டிருந்தார். கீழே விழுந்து எழுந்த லலிதாவும் ஓடி வந்தாள். கணேசன் காரில் உட்கார்ந்து கொண்டு இருப்பதை பார்த்தாள். அதற்குள் சுந்தரம் லலிதாவை உள்ளே தள்ளி தெருக்கதவை மூடிக்கொண்டார். துயரங்கலந்த உள்ளத்தோடு திரும்பும்போது கணேசனின் காரின் ஹாரன் சப்தம் தொலை தூரத்தில் ஒலித்தது. (வளரும்)

கே.ஜி.ராஜ் எழுதும்

மறைந்த குற்றவாளி

1 வல்லவனுக்கு வல்லவன்.........

நள்ளிரவு.

எங்கும் அமைதி குடிகொண்டிருந்தது. மனிதர் நடமாட்டம் அற்றிருந்ததுபோலவே, இதர ஜீவ வர்க்கங்களின் சஞ்சாரமும் ஓய்ந்திருந்தது. பிருந்தா வனத்தோட்டம் காரிருளில் மூழ்கிக்கிடந்தது. ஆயினும், அதன் நடுவேயுள்ள பங்களாவின் மாடியில் நீல நிற மின்சார விளக்கு ஒன்று தன் கம்மிய ஒளியை உமிழ்ந்து கொண்டிருந்தது. பங்களாவின் கீழ்க்கட்டிலும், சுற்றுப் புறங்களிலும் கவிந்திருந்த இருள், காண்போர் உள்ளத்தை கதி கலங்கச் செய்யும் சூழ்நிலையை உண்டாக்கிக் கொண்டிருந்தது. "டக்! டிக்!...டக்! டிக்" என்ற சிறு ஓசையை கட்டடத்திற்குள்ளே ஓர் அளவாக எழுப்பிக்கொண்டிருந்த சுவர் கடிகாரம் 'டண், டணர்!' என்று இரண்டு பெரிய ஓசைகளை எழுப்பிவிட்டுப் பெருமூச்செறிந்தது. பங்களாவின் ஓரத்தில் வளர்ந்திருந்த பலாமரமொன்றில் அமர்ந்திருந்த ஆந்தையொன்று கடிகார ஓசையைக் கேட்டதும் அலறிப் புடைத்துக்கொண்டு பறந்தோடியது. பங்களாவின் முன்புறத்தில் சுருண்டு படுத்து உறங்கிக் கொண்டிருந்த அல்சேஷியன்

4

நாய் ஏதோ அபாயத்தைக் கண்டு விட்டதைப்போல் பெருங்குரலில் குரைத்தது. தொண்டை வலிக்கும் வரை குரைத்து ஓய்ந்த நாய், முன்னே படுத்திருந்த விடத்திற்குச் சென்று முடங்கிக் கொண்டது.

நாயின் அட்டகாசம் அடங்கியதும் மாடி முன்புறக் கதவோரத்தில் பழைய பாய்ஒன்றில் படுத்திருந்த நடுத்தர வயதுள்ள மாது ஒருவள் எழுந்து உட்கார்ந்து நாற்புறங்களையும் கண்ணோட்ட மிட்டு கவனித்தாள். யாரும் தென்படாது போகவே மனத்திடம் அடைந்து விட்டவள்போல் சட்டென்று எழுந்து நின்றாள். சுவரில் பதித்திருந்த மின்சார விளக்கின் பித்தானைத் தட்டிவிட்டு இருள் கவிந்துகொள்ளுமாறுச் செய்தாள். உடனே, தன் உடைகளைக் கழற்றி பந்துபோல் சுருட்டி கீழ்க்கட்டை நோக்கி வீசினாள். அதன் பின் தலை ரோமத்தை இழுத்தாள். அது கையோடு வந்து விட்டது. அதையும் வெளியே வீசினாள். அப்போது அவள் அவனாக மாறிவிட்டிருந்தான்.

நடுத்தர வயதடைந்து விட்ட மாதாகத் தோன்றிய அவன் முரட்டு மனிதனாய்க் காணப்பட்டான். வயது முப்பத்தைந்துக்கு உட்பட்டே இருக்கும். குறுகுறுத்தக் கண்கள். எதையும் துணிந்து செய்யக்கூடியவன் என்பதை கூரிய மூக்கும், குறுகிய தாழ்வாயும் காட்டின.

அவன் கதவருகே சென்று சில விநாடிகள் அமைதியாக நின்றான். உட்புறத்தில் என்ன ஓசை கேட்கிற தென்பதை அறியவே அவ்வாறு நின்றான். தூக்கத்தில் யாரோ குரட்டை விடும் ஓசை மாத்திரம் கேட்பதாய் நிச்சயித்தான். கதவைத் தள்ளிப் பார்த்தான். திறக்கவில்லை. உட்புறம் தாளிடப் பட்டிருப்பது அவனுக்குத் தெரிந்திருந்தும் ஏதோ சந்தேகங் கொண்டு தள்ளிப் பார்த்தான்.

கதவைத்திறக்க என்ன செய்யலாம் என்று யோசித்தான். ஏதோ ஓர் முடிவுக்கு வந்து விட்டவனைப்போல் கதவை 'தட தட' வென்று தட்டினான், 'உம்...ம்...ம்..." என்று முனகும் ஓசை அவன் காதில் பட்டது. மீண்டும் தட்டினான், யாரோ நடந்து வருவதும், கதவைத் திறப்பதும்

தெரிந்தது அவனுக்கு. தயாராய் நின்று கொண்டான் அவன்.

கதவு திறந்தது. மங்கிய மின்சார விளக்கு உள்ளே பிரகாசித்துக் கொண்டிருந்தது. அதன் ஒளியிலே கதவைத் திறப்பவள் ஓர் இளம் வயது மங்கை என்று தெரிந்தது. அடுத்த விநாடியே அவள் மேல் பாய்ந்தான். அவன் ஒரு கையால் தலையை வளைத்துப் பிடித்தான். மற்றொரு கையில் வைத்திருந்த சிறு கைக்குட்டையை அவள் மூக்கெதிரே பிடித்தான். அவள் சப்தம் எதுவும் எழுப்பவில்லை. பிரக்ஞை இழந்து தரையில் சாய்ந்தாள். அப்படியே அவளை கீழே கிடத்தி விட்டு, உள்ளே நுழைந்தான். முதலில், எரிந்து கொண்டிருக்கும் மின்சார விளக்கை அணைத்தான் தன் கையில் வைத்திருந்த டார்ச் விளக்கால் ஒளியை உண்டாக்கி

எதிர்புறத்திலிருந்த அறைக்குள் நுழைந்தான். மேஜை நாற்காலிகளெல்லாம் அங்கிருந்தன. அவன் டார்ச்சின்

உதவியால் மேஜை ட்ராயர்களைத் திறந்து சோதித்தான்.

அவன் தேடும் பொருள் தென்படாததால் மனம் சோர்ந்தான். நாற்புற சுவர்களிலும் டார்ச் விளக்கொளியைப் பாய்ச்சி கவனித்தான். சுவர் ஓரத்தில் இரும்புப் பெட்டியிருப்பது தெரிந்தது. அங்கே சென்றான். தயாராய் எடுத்து வந்திருந்த சாவிக் கொத்தை உபயோகித்து திறப்பதில் ஈடுபட்டான். சில நிமிஷங்களில் அவன் முயற்சி பலன் தந்தது. திறந்து கொண்ட பெட்டிக்குள் டார்ச் விளக்கொளியைப் பாய்ச்சினான்.

அதற்குள்ளே சில காகிதக் கட்டுகள மாத்திரமிருந்தன. அவைகளை எடுத்து சோதித்தான். ஓர் கட்டில், தான் தேடும் காகிதம் இருக்கக்கண்டு அதை எடுத்து தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.. தான் நாடி வந்தக்காரியம் முடிந்து விட்டதாய் எண்ணிய அவன், வந்த வழியாய்த் திரும்பினான். மாடிமுன் கட்டின் கைப் பிடிச்சுவர் ஓரமாய் வந்து, அங்கே தயாராய்

தொங்க விடப்பட்டிருந்த தாம்புக் கயிறைப் பற்றிக் கீழே இறங்கினான்.

தெருவாசல் கதவு திறக்கப் பட்டிருந்தாலும் அவ்வழியில் செல்வதால் அபாயம் ஏற்படுமென்று அவன் எண்ணி விட்டிருக்கவேண்டும். பங்களா காவல்காரன் வழியில் படுத்திருப்பதோடு, பார்க்கவே பயங்கரமாய் உள்ள அல்சேஷியன் நாயும் அங்கிருப்பது அவனுக்குத் தெரியும். அவன் தரையை அடைய சில கஜதூரமே இருந்தது. எனினும் கவிந்திருந்தக் காரிருளில் தரையிருக்கு மிடத்தை அவன் கண்களால் காணமுடியவில்லை. நிதானமாய் இறங்கிக் கொண்டிருந்தான். அப்போது சமீபத்திலிருந்த சிறு புதரில் ஏதோ சலசலப்பு சப்தம் கேட்டது. எலி அல்லது பூனை புகுந்துப் போகும் ஓசையாய் இருக்குமென்று எண்ணினான். அவன் மேல்மூச்சு கிழ்மூச்சு வாங்க ஊர்ந்து வந்து தரையை நெருங்கிவிட்ட சமயம், தலையே சிதறி விடுவது போன்ற பலத்த அடிபட்டு தொப்பென்று தரையில் விழுந்தான். இசை பிசகான நிலையில் தாக்கப்பட்டதால் அவன் வாயிலிருந்து அபாய ஓசை எதுவும் எழவில்லை. சிறு முனகல் சப்த மேற்பட்டதாயினும், அது அந்நியர் காதில் விழுவதாயில்லை.

அவன் தரையில் சாய்ந்த மறுநிமிடமே, புதர் மறைவிலிருந்தபடி தடியால் தாக்கியவன் பாய்ந்தோடி வந்தான். அவன், குனிந்து கீழே விழுந்து கிடப்பவனைத் தூக்கி தோளில் சார்த்திக் கொண்டு கிழக்குப் புறமாய் நடந்தான். அந்தப் பங்களாவின் தெருப்புறம் தென்திசையிலிருப்பதை அவன் அறியலாம லிருப்பதற்கில்லை. தெருப்புறமாய் வந்தால் காவல்காரன் கண்டு விடலாம். அல்லது நாய் துரத்தலாம். கிழக்கு புறத்திலுள்ள மதில் சுவர் பாழடைந்து இடிந்துக் கிடந்தது. அவ்வழியாய்ச் சென்று மறைந்தான் அவன்.

(வளரும்)

ஆயுத போலீஸ் கதை

—[இந்திய காவலர்]—

ஒரு நாட்டின் பாதுகாப்பு படை போலீஸ் ராணுவம். உள்நாட்டைக் காப்பது போலீஸ். அந்நியர்கள ஆக்ரமித்துக்கொள்ளாதபடி பாதுகாப்பது ராணுவம். இந்த ரீதியிலே நமது மாகாண போலீஸ்படைகளில் மிக விரைவாகவும், விநோதமாகவும் தயாரிக்கப்பட்ட படை விசேஷ ஆயுதந்தாங்கி போலீஸ் படை. எவ்வளவு விரைவாக தயாரிக்கப்பட்டதோ அவ்வளவு விரைவாக குறைக்கப்பட்ட படையும் இப்படையே என்றாலும், அது சிந்தியரத்தம், அதுவிட்ட ஜீவன், அது செய்த சேவை என்றும் மறத்தற்கில்லை; மறக்கவும் முடியாது.

இந்தியாவின் பிரதான சமஸ்தானமாகிய ஹைதராபாத்திலே தனிப்புகழ் பெற்று தழைத்தோங்கிய நைஜாம் நாட்டிலே, மதவெறி கொண்டு மக்களை மிருக வேட்டையாடினான், கோரக் கொலைகள் புரிந்தான். கொடூரச்செய்கைகள் செய்வித்தான் கொடும்பாவி ரஜ்வி. மக்கள் பதறினர், அலறினர், ரத்த வெள்ளத்தில் தோய்ந்து, தோய்ந்து மூழ்கினர். யாரிடத்திலும் எதையும் சொல்ல சக்தியின்றி தவித்தனர் மக்கள். எனெனில் அங்கு அன்று நடந்த ஆட்சி அப்பேர்ப்பட்டது. அத்தின்றி நடந்தார்கள் இந்த அக்ரம கூட்டத்தார்.

ஹைதராபாத்தின் நிலை அல்லோகலமாகி விட்டது. ஆவி துடிக்க துடிக்க மாண்டவர்கள் எத்தனை பேர்? அங்கஹீனமாக துண்டிக்கப்பட்டு, அறுத் தெறியப்பட்டவர்கள் எத்தனைபேர்? ஆண்களை இழந்த பெண்கள் எத்தனை பேர்! பெண்களை இழந்த ஆண்கள் எத்தனை பேர்! குழந்தைகளை இழந்த தாய்மார்கள் எத்தனைபேர்! தாய்மார்களை இழ்ந்த குழந்தைகள் எத்தனை பேர்? ஆதரவில்லாது அலைந்த மக்கள் எத்தனைபேர்!

ஹைதராபாத் இந்த அரக்கர்களின் வேட்டைக்காடாயிற்று. வேட்டைக்காடுவிரைவில் விரைந்துதோடும் ரத்தக்காடாயிற்று. இப்படி இருந்தது ஹைதராபாத் நிலை. ஹைதராபாத் மக்கள் என்ன செய்வார்கள்? ஏங்கி, ஏங்கி கண்ணீர் விடுவதை விட எல்லா மக்களும் ஒன்று சேர்ந்து டில்லியிலே ஆட்சி பீடம் ஏறிய அமைச்சர்களை நோக்கி ஓலமிட்டார்கள்.

"சுதந்தர இந்தியாவின் தலைநகராகிய டில்லியிலே ஆட்சி பீடம் ஏறிய அமைச்சர்களே எங்களது கூப்பாடுகளைக் கேளுங்கள்! எங்களை உற்று நோக்கி உதவுங்கள்! நாங்கள் படும் பரதவிப்பை பாருங்கள்! எங்களுக்கு ஆதரவு இல்லையா? எங்களை அன்புமொழி கொடுத்து அணைக்கயாருமில்லையா? நாங்கள் துன்பக்கடலில் துள்ளுகிறோம். புழுவாய்த் துடிக்கிறோம். நெளிகிறோம் நாங்கள். ஏன் இவ்வாறு சித்ரவதைசெய்யப்படவேண்டும்? நாங்கள் ஏன் இவ்வாறு துன்புறுத்தப்பட வேண்டும் இந்த மதியிழந்த மதவெறியர்களால்? நாங்களும் இவர்களைப்போல் பகுத்தறிவுள்ள மக்கள்தானே? நாங்கள் இவர்களுக்கிழைத்த துரோகம் என்ன? எனக் கதறி கண்ணீர் விட்டார்கள்.

ஹைதராபாத்மக்களின் எதிரொலி ஆட்சி பீடம் ஏறிய அமைச்சர்களுக்கு எட்டிற்று. என்ன சொல்வார்கள் அமைச்சர்கள்? புதிதாக ஆட்சி பீடம் ஏறியவர்கள். பொறுத்து செய்யவேண்டியவர்கள். சுதந்திர இந்தியாவின் சூழ்நிலைகளில் இதுவும் ஒன்று எனத்திணறினர்கள். எந்த சக்தியைக் கொண்டு சுதந்திரம் அடைந்தார்களோ அதே சக்தியைத்தான் இங்கு உபயோகிக்கவேண்டும். எந்த ஆயுதத்தைக் கொண்டு சுதந்திரம் அடைந்தார்களோ, அதே ஆயுதத்தை தான் உபயோகிக்க வேண்டும் என நினைத்தார்கள். அந்த சக்தி எது? அதேஆயுதம் எது? அதுதான் அஹிம்சா சக்தி. காந்தியடிகளின் அரியபெரிய ஆயுதம். காந்தி அடிகளின் ஆதரவில் ஆட்சிபீடம் ஏறிய அமைச்சர்கள் அஹிம்சையை உபயோகிக்க நினைத்தார்கள்.

உடனே அதே அமைச்சர் குழுவினுள் ஓர் வீர அமைச்சர் வெகுண்டு எழுந்தார் வேங்கையைப்போல். வைர நெஞ்சன் வல்லபாய்படேல்

தற்போது நம்மிடையே மறைந்த தலைவர்.

ஓ! ஹைதராபாத் மக்களே! துன்பவெள்ளத்தில் துடிக்கும் துணையற்றவர்களே! இரத்த வெள்ளத்தில் ஊசலாடும் என் அருமை மக்களே! இதோ உங்களுக்கு என் புத்துயிர்! இதோ உங்களுக்கு என் முழு ஜீவன்! இதோ உங்களுக்கு என் முழு பொறுப்பு. உங்களை சித்ரவதை செய்தவர்களை நான் சித்ரவதை செய்கிறேன். உங்களைப் பழிவாங்கியவர்களை நான் பழிவாங்குகிறேன். நீங்கள் எதற்கும் திகில்

தொழில் காரியாலய மானேஜர் ஸ்ரீ C. கங்காதரன் அவர்களின் தாயார், தில்லைநாயகி அம்மாள் தமது 80-ம் வயதில் 15—2—59 ஞாயிறு இரவு 10 மணிக்கு சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் காலமானார். அன்னாரின் பிரிவால் வருந்தும் குடும்பத்தினர்க்கு நமது அனுதாபம்.

கொள்ளவேண்டாம். எனக் கூறி காந்தியடிகளின் அரும் பெரும் ஆயுதமாகிய அஹிம் சையே நீ அப்பால்போ! கொஞ்சம் விலகி நில். இந்நிலை யில் என் மக்களைக் காப்ப தற்கு உன்னை உபயோகப் படுத்தப்போவதில்லை. அதற்காக நீ கோபித்துக் கொள்ளவேண்டாம். பிறகு உன்னைத் தூக்கிக் கொஞ்சு கிறேன். குலாவுகிறேன். அஹிம்சா மூர்த்தி அரும் பெருந்தியாகி, அவனியின் திலகம் காந்தியடிகள் என்ன கூறியிருக்கிருர் அஹிம்சைக் கும் ஓர் அளவு இருக்கிறது, தன்னைக் கொல்ல வரும் கன்றையே கொன்று விடு எனக் கூறியிருக்கிருர். ஏன்? அது செய்த கொடிய துரோ கத்தை சகிக்க முடியாமல்.

இயேசு பெருமான் தீயவர் களால் நேர்ந்த துன்பங்களை அமைதியுடன் ஏற்று மக்க ளுக்கு உபதேசித்தார். பாவி களை ரட்சிக்க ஏசுகிறிஸ்து உலகத்தில் வந்தார் என கிறிஸ்துவேதம் கூறுகிறது. அவர் யாரையும் எந்த இடத் திலும், எந்த சமயத்திலும் மனத்தாலும் செயலாலும் அடித்ததும் இல்லை. ஆனல் ஒரே ஒரு இடத்தில் மட்டும் கைதொட்டு அடித்தார் என

மணம், குணம் ஒருங்கே அமைந்த

மரகதம்

காபியை

உபயோகியுங்கள்

அரைத்து கொடுக்கப்படும்

K. ராமசாமி உடையார்,

பூரண உரிமையாளர்,

மரகதம் காபி ஒர்க்ஸ்

கரூர்.

வேதம் கூறுகிறது. அவர் உயிர்கொண்ட தேவனின் திருவாலயத்தே கசடர்கள் கள்ளர் குகையாக்கி விட்டார் கள். அங்கே குடி, விபசாரம் திருடு, சூது ஏமாற்றும் வியாபாரம் இவைகள் எல் லாம்நடந்தன. இந்தக் கொடு மையை கண்கொண்டு பார் க்க முடியவில்லை. ஆகை யால் சினங்கொண்டு அப்பாவிகளை சவுக்கினல் அடித்து துரத்தினர். பாவி களே என் தேவனின் திரு வாலாயத்தை நீங்கள் திரு டர் குகையாக்கிவிட்டீர்களே எனக் கதறினர் இங்கே

அவர் சாந்தத்தை கையாள வில்லை. அவர் கொண்டிருந்த பூரண அமைதியையும் குலைத்தார்கள் இந்த பொல்லாத ஆர்பாட்டக்காரர்கள்.

இதோ நம் தமிழ்ப் பெரும் புலவன்வள்ளுவன் கூறியது போல்.

குணமெனுங் குன்றேறி
நின்றார் வெகுளி
கணமேனுங்காத்தல் அரிது.

என்பது உண்மை.

எழுந்தார் உணர்ச்சியின் தீரன். இரும்புக் குண்டு வீரன் படேல். ஏ! இரக்க மற்ற இராட்சச கும்பலே! எந்த நாள் மட்டும் இந்தக் கொடூர கொலை? எந்த நாள் மட்டும் இந்த கோரக்காட்சி? ஏதுமறியா என் மக்களை என் இவ்வாறு சித்ரவதை செய்கிறீர்கள். இதோ உங்களுக்கு கடைசி சாவுமணி.

உங்களை நான் சும்மா விடப்போவதில்லை. நீங்கள் நடத்தும் இந்த கொடூர செய்கைகளை. நான் சகியேன் உலகத்தில் உள்ள எந்த மக்களும் சகியார்கள். உங்கள் தலைவனை அல்லாவும் சகியான் எனக் கூறி பறை சாற்றினார். இந்தியாவின் பலமாகாணங்களுக்குஉத்தர விட்டார். கொண்டு வாருங்கள் ஆயுதமேந்திய போலீஸ் படைகளை. நம்மக்கள் படும் அவஸ்தை தீர்க்க அல்லலைப் போக்க அறுத்தெரியுங்கள் இந்த அரக்கர்கும்பலை. அடக்குங்கள் அவர்களின் அக்ரமச் செயல்களை என அறை கூவினார். அதற்காக உருவானதுதான்போலீஸ் படை. அரும்பெரும் சேவைசெய்து அழியாப்புகழ் பெற்ற படை இதுவேதான்.

ஆசிரியர்களுக்கு பதில் ஒலிப்பதிவு இயந்திரம்

லண்டனில் ஆசிரியர் பஞ்சத்தைத் தீர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட ஒரு சோதனை மிகவும் வெற்றிகரமாகச் செயல்படுகிறது. இந்தச் சோதனையில் ஆசிரியர்களுக்கு பதிலாக ஒலிப்பதிவு இயந்திரங்கள் உபயோகிக்கப்படுகின்றன. ஆசிரியர்களின் வாராவாரம்வகுப்புக்கு வராமல், தங்கள் பிரசங்கங்களை டேப்பில் ஒலிப்பதிவு செய்து கொடுத்து விடுகின்றனர்.பின்னர் வகுப்புகளில் இவை ஒலிக்கப்பட்டு பாடம் நடக்கிறதாம். இந்த முறையை உபயோகிக்கும் மாணவர்கள் அதிக மார்க்குகள் பெறுவதாக நிபுணர்கள் கூறுகின்றனர்.

நாட்டுக் காதல்

"ராதா"

நம் முன்னோர்கள் நிலத்தை ஐந்து வகையாகப் பிரித்தார்கள். இவை குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவையாகும்.

ஒவ்வொரு நிலத்தில்வாழ்வோரும் அந்நில பரபபிற்கு உகந்தவாறு தம் வாழ்க்கையை வகுத்துக்கொண்டனர். அகத்தின் பிரதிபலிப்பே புறத்தில் நிகழ்கின்றன. காதலைப்பொறுத்தவரையில் அவர்களின் போக்கு எத்தகையதாய் இருக்கிறதென்பதை ஆராய்வோம்.

குறிஞ்சி நிலமும், குடிமக்களும்

குறிஞ்சி என்பதாவது யாது? மலையும், மலையைச் சார்ந்த இடமுமே குறிஞ்சி எனப்படும். இங்கே வாழும் ஆண் மக்கள் வெற்பன், சிலம்பன், குறவன் என்றும், பெண்கள் குறத்தி, கொடிச்சி என்றும் அழைக்கப்பட்டனர். இந்நாட்டில் உள்ள ஊர்களுக்கு சிறுகுடி என்று பெயர். இம்மலைநாட்டுக்குக் கடவுள் 'முருகன்.'

மலைநாட்டை சேர்ந்த குறத்தலைவன் (இளைஞன்) ஒருவன் ஓர் உயர்குல குறத்தியை (தலைவி) திணைபுனத்திலே கண்டு காமுறுகிறான். செங்கரும்பு போன்ற சிங்காரி அவள். நல்ல அழகி. பவழச் செவ்வாய், முல்லை முறுவல். கொள்ளை கொள்ளும் விழிகள், மயில் சாயையுடைய மையல். அவளின் அழகைக்கண்டுஅசைவற்று நின்றான். "என்ன அழகு! என்ன அழகு! இன்பமடா இன்பம்' இல்லை இல்லை இன்பச்சுரங்கமடா!' என்று கூறி குதித்தான். பெருமூச்செறிந்தான். கண்கள் இரண்டையும் மூடித்திறந்தான். பற்களை இறுகக் கடித்துக்கொண்டான். உதட்டை அடித்துக்கொண்டான். கைகளை கட்டிப்பிசைந்தான். பிறகு என்ன செய்வது? மெல்ல நடந்து தன் இருப்பிடம் அடைந்தான்.

"என்ன ஒரு மாதிரியாக இருக்கிருய்?" என்று வினவினுன் தோழன்.

"ஒன்று மில்லே நண்பா! அந்தப்புறம் போய்வந்தேன்"

"அந்தப் புறமா? எந்தப் புறம்?

"மலைப்புறம்"

"அங்கே என்ன கண்டாய்?"

"அம்பு பாயக் கண்டேன்!"

"யார் மீது?"

"என் மீது தான்!!"

"உன்மீதா? அம்பா?

"ஆம், பார்வைக்கு மலர் அம்புபோல் இருந்தது ஆனல், நன்ருக தைத்து விட்டது. பதைத்தேன். "என்ன?" உண்மைதான் அவள் என்மீது கண்வீசினுள். நானும் நோக்கினேன்."

'அவளா? இவள்?"

குருவியோட்டிய பெண்! மலைவாணர் பெண்"

"நண்பா! கூறுவதுகேள். அவள் உயர்'குலப் பெண். உனது தகுதிக்கு ஒவ்வாத இடம். எச்சரிக்கையாய் இரு.

மடல் ஏறுவேன்

பிறிதொருநாள் மலைப் பக்கம் போகிருன். இக்கணம் அவள் (காதலித்தவளின்) தோழியைச் சந்தித்தான். அவளிடம் செங்காந்தள் பூவொன்றை ஈந்தான்.

"என்ன இது?" என்று கேட்டாள் தோழி.

"தெரியவில்லையா?"

"தெரிகிறது எதற்கு?"

"எதற்கென்று தெரியவில்லையா? இளைஞன் ஒருவன் மலர் கொடுத்தால் பொருள் என்னவாம்!"

"ஒகோ! அப்படிச்சொல்லு. நீ எங்கள் தலைவியின் மீது காதல் கொண்டு விட்டாயா? இம்மலரை அவளிடம் கொடுக்கச் சொல்லுகிருயா?"

"ஆம்!"

"இதோபார்! தங்கள் மலையில் காந்தள் பூ நிறைய உள்ளது. பஞ்சமேதும் இல்லை. நீ கொணர்ந்தமலர்வேண்டாம். போய் வருக, வெற்பனே!" என்ருள் தோழி. "அப்படியானல்...?"

"என்ன? இன்னும் என்ன சொல்லவேண்டும்!"

"அவளிடம் என் எண்ணத்தைச் சொல்லி...

"சொல்லி?"

"அவளை அதற்கு இணங்கச் செய்யவேண்டும்"

"அதுதான் முடியாது"

"முடியாதா?"

"ஊஹும்... அவளுக்கு உன் மேல் காதல் பிறக்கவில்லையே!"

"பிறக்கவில்லையா? நான் அவளுக்காக படும்பாடு

கண்டுமா காதல் பிறக்க வில்லை?" "இல்லை".

"அமுதம்போன்ற இன்மொழியாள். புன் முறுவலால் என்னைப் புறக்கணித்து விட்டாள். ஆனால் நான் என்ன செய்யப்போகிறேன் தெரியுமா?"

"என்ன செய்யப்போகிறாய்?"

"மடல் ஏறப்போகிறேன்"

"ஊரெல்லாம் உன்னைப் பற்றி பேசும்"

"பரவாயில்லை. நான் வெட்கத்தை விட்டுத்தானே மடல் ஏறப்போகிறேன்"

"அப்படியெல்லாம் செய்து விடாதே. ஆகட்டும் பார்க்கலாம் என்றாள் தோழி.

தலைவியின் கருத்து

தினைப்புனத்தே காத்திருக்கும் தலைவி, "எங்கே அவர்? இன்று வரக்காணோமே?" என்று கேட்டாள்.

"யார்? அந்தக் காளையா?" என்றாள் தோழி.

"ஆம்"! வரவேண்டாம் என்று சொல்லி விரட்டிவிட்டேன்"

"போடி நீ, இப்படித்தானா? ஏன் வேண்டாம் என்றாய்?"

"ஏன்? உனக்கும், அவன் மீது காதலா?"

"ஆமாம். நான் காதலால் தவிக்கிறேன்"

"ஓ! அப்படியானால் சரி. என் மீது கோபியாதே.வேண்டிய ஏற்பாடு செய்து வைக்கிறேன். ஆனால்!......"

"ஆனால் என்ன?" "பகலில்தான் சந்திக்கலாம் என்று சொல்லி அனுப்புகிறேன்"

சரி, சொல்லு"

தலைவனைக்கண்டு அனைத்தும் கூறினாள். தினைப்புனத்தில் பகலில்கண்டு சந்திக்க வேண்டி எல்லாஏற்பாடுகளையும் செய்து முடித்தாள். தலைவனும், தலைவியும் சந்திக்கலாயினர். இன்பம் துய்த்தனர். அவ்வாறே நாட்கள் பல கழிந்தன, இரு உள்ளங்களும் ஒன்றாயின. உடலும் ஒன்றாயினர்,

"அன்பே! ஆருயிரே"

"இன்பமே"

"பிரியேன்"

"பிரிந்தால் உயிர் தரியேன். ஆம் கடம்பத்து கடவுள் ஆணை" கார் வந்து விட்டது. எங்கள் காவல் முடிந்தது. நாளைக்கு வீடு செல்கிறோம்" என்றாள் தலைவி. இதைக்கேட்ட தலைவன் இடிந்து போனான்.

"போகிறீர்களா?" அதற்கு மேல் அவனும் பேசமுடியவில்லை.

ஏன்? என்ன... "ஒன்றுமில்லை இனிமேல் எங்கே சந்திக்க இயலும்?" என்று பெருமூச்செறிந்தான் விடைபெற்று வரும்போது தோழியை சந்தித்தான்.

"உன் தயவு இருந்தால் போதும்" என்றான்,

"அவள் தயவா? எதற்கு?"

"சங்கிலி அறுந்து போகாமல் இருப்பதற்கு...?

"அதற்கு என்ன செய்ய வேண்டும்?"
ஒரு "ஏற்பாடு".

"என்ன ஏற்பாடு?
"அப்படி...கொஞ்சம் இரவு நேரத்தில் அவளுடன் பேசி விட்டுப்போக"

"முகராத முல்லையை நீ முகர்ந்து விட்டாய். இனி என்ன செய்வது? எங்கள் சிற்றூர் அருகில் பனைமரத் தோப்பு உளது! அங்குவா. அடிக்கடிவா. வந்து உன் காதலிக்கு இன்பம் தா. மறவாதே. போய் வா. நாங்கள் வருகிறோம்"

இரவு நடுநிசியாகியும் தூக்கம் வரவில்லை. காதலனை பிரிந்து வாடும் துன்பம். ஏக்கமுற்றாள் இதைக் கண்டதோழி அவளுக்கு தேறுதல் மொழி கூறினாள். இரவிலே வந்து சந்திக்க செய்திருக்கும் ஏற்பாட்டை விளக்கினாள்.

அவள் மொழிந்ததைக் கேட்ட தலைவி, "ஐயோ? இரவிலா?" என்று கேட்டாள்.

"ஆம்"

"நமக்கு பழி வருமே?"

"வந்தால் வரட்டுமே!"

"எனக்கு பயமாயிருக்கே!"

"என்ன பயம்?"
"வரும்வழி எப்பேர்ப்பட்டது?
சிங்கமும், யானையும் சண்டைபோடும் வழியாயிற்றே."

"அவனே துணிந்து வாசல் மிதித்தபோது ஏற்காமல் இருக்கலாமா அதுவுமன்றி பகல் நேரத்திலே வந்தால் யாரேனும் பார்த்து விட்டால்"

"சரி பிறகு உன் விருப்பம்".

யாருக்கும் தெரியாமல் இரவு நேரத்திலே வந்து

போகிறான். இன்பம் துய்க்கிறான்.

இனி இந்த நிலைமை நீடிக்கக்கூடாது என்ற எண்ணம் தோழிக்கு தோற்றலாயிற்று ஊரார் பழிசொல்வார்கள். "இனிமேல் இந்தமாதிரி இரவில் வராதே" என்று படும்படியாக நிலைவைக் காரணம் வைத்து கூறினாள். இதை அறிந்து கொள்கிறான் தலைவன்.

"ஏன்?" என்றான்.

"ரொம்ப கஷ்டம்"

"என்ன கஷ்டம்"

"யாராவது கண்டு கொண்டால்..."

"பின் என்ன தான் செய்வது?"

"உன் காதலியும் வாடுகிறாள். விரைவில் மணம்புரிவாய்" என்றாள் தோழி. பின் தலைவியைப்பார்த்து, "போய் வருகிறேன்" என்றான். அவளால் பதில்பேச முடியவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் பெருகிற்று. "கண்ணே வருந்தாதே" என்றான். கட்டியணைத்தான். கண்ணீரைத் துடைத்தான். மேகத்தையொத்த கருங்கூந்தலை கோதினான். "விரைவில் வருவேன், விடைகொடு-பொருள் தேடி வருகிறேன். பின் உன் பெற்றோரைபெண் கேட்டு பெறுகிறேன்" என்று சொல்லி நின்றான். "போய் வா" என்றாள். நா தழுதழுத்தது.

திருட்டுப்பற்றி எஜமானிக்கு நாயின் தகவல்

வட இத்தாலியில் ஒரு ஸ்திரியின் வீட்டில் திருடர்கள் புகுந்து திருடியபோது, அவளுடைய நாய் அவள் இருந்த இடத்திற்கு ஓடிச் சென்று அதை யறிவித்தது அந்த ஸ்திரீ சினிமாவுக்குப் போயிருந்தபோது அவள் வீட்டில் திருடர்கள் புகுந்து திருடத் தொடங்கினர். உடனே நாய் சினிமாக் கொட்டகைக்குப் பாய்ந்து ஓடி அங்கு குரைக்கத் தொடங்கியது. அதுபோட்ட சப்தத்தின் விளைவாக சினிமாக் காட்சியைக்கூட நிறுத்த வேண்டியதாயிற்று. நாய் தன் எஜமானியின் காலைப் பல்லினால் கவ்வி வாசற் பக்கம் இழுத்தது. அவள் வீட்டுக்குப்போய் பார்த்த போது, சுமார் 830 பவுன் பெறுமானமுள்ள அவளுடைய நகைகளும் வெள்ளிப் பாத்திரங்களும் களவுப் போயிருந்தன.

"ஜீப்" மார்க்கு

எலக்ட்ரோ பிளேட் சாமான்கள்

அனுபவமும் பிரசித்திப் பெற்றதுமான

கிரேட் ஈஸ்டர்ன் கமர்ஷியல்

கார்ப்பரேஷன் லிமிடெட்டாரால்

தயாரிக்கப்பட்ட

பித்தளை, ஸ்டீல், நிக்கல் சாமான்களின் மீது கியாரண்டியான வெள்ளி, நிக்கல், குரோமியத்தால் உத்திரவாதமான எலக்ட்ரோ பிளேடிங் செய்யப்பட்ட தாம்பூலத்தட்டு, ஆப்பிள் டிசைன் பௌடர் பெட்டிகள், டீ செட்டுகள், ஸ்பூன்கள், டேபிள் போர்க்கு, சகலவித ஸ்பூன்கள், குருவெட் செட்டுகள், பலவித தட்டுகள், டிரேக்கள் அநேக ரக சிகரெட் கேஸ்கள், ஐஸ் கிரீம் ஸ்பூன்கள், கத்திகள், மற்றும் பலவித நூதன அழகான ரகங்களும் எங்களிடம் கிடைக்கும்.

★

S. C. SHAH

9, BUNDER ST., MADRAS-1

பூவழகி

மங்களகரமான மாலை வேளை. குளிர்ந்த கடற்காற்று வீசியது. பகல் பூராவும் பகலவனின் வேனல்கதிர்களினால் வேதனைப்பட்டு வேர்க்க விறுவிறுக்க இருந்த உடம்பிற்கு அந்தக்காற்று இதமாக இருந்தது; கூட இன்பமும் தந்தது.

[நா. கிருஷ்ணமூர்த்தி]

எலுமிச்சம்பழத்தில் சர்பத் செய்து அதில் குளிர்ச்சியாக ஐஸைப் போட்டுப் பருகிவிட்டு சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டிருந்தார் சாம்பசிவம்.

அவர் கை ஏதோ ஒரு கதைப்புத்தகத்தைத் தாங்கிக் கொண்டிருந்தது. கண்ணினுள் இருந்த கருவிழிகள் வலப்புறமும் இடப்புறமுமாக மாறி மாறிச் சுழன்றுகொண்டிருந்தன!

சட்டென்று புத்தகத்தை மார்பின் மீது போட்டுக்கொண்டு சுவர்கடிகாரம் இருக்கும் இடத்தை நோக்கிக் கண்களைத் திருப்பினார்.

மணி ஐந்தே முக்கால்—ஆறடிக்கப் பதினைந்து நிமிடங்கள் பாக்கி.

அவர் உள்ளம் விநாடி முள்ளைக் காட்டிலும் வேகமாக அடித்துக்கொண்டது. ஆறு மணியின் வரவிற்கு ஆவலுடன் துடித்து நின்றது அவர் உள்ளம்.

திரும்பவும் புத்தகத்தில் சிந்தனையைச் செலுத்த முயன்றார். முடியவில்லை அவரால். எழுந்தார்.

அழகில் சிறந்த மங்கையை மனைவியாய் அடையத் துடிக்கிறான் மகன். அழகு நிலையானதல்ல; அறிவே நிலையானது என்று வாதிக்கிறார் தந்தை. அழகை விரும்பிய மகன் அதையே அடைகிறான். ஆனால். அது நிலைத்ததா? கதை கூறுகிறது. முடிவை. ஆ—ர்.

அறையினுள் அங்குமிங்கும் நடந்தார். நிமிடங்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

கடிகாரம் ஆறு தடவையும் அடித்து ஒருவழியாக ஓய்ந்தது. வாயிலுக்குச் சென்று எட்டிப்பார்த்தார்.

மாலைவேளையாகையால் சாலையில் கூட்டம் இருந்தது. அந்த மக்கள் நடமாட்டத்தின் நடுவில், சற்று தொலைவில் நாவுக்கரசு வந்து கொண்டிருந்தான்.

தன் மகன், தான் நினைத்தபடி சரியான நேரத்திற்கு வந்துவிட்டான் என்று நினைத்து மகிழ்வு அடைந்தார். உவகையோடு உள்ளே சென்றார்.

* * *

திரண்ட சொத்து சாம்பசிவத்திற்கு இருக்கிறது. உழைத்துச் சேர்த்தார். மகனையும் கல்லூரி வரை படிக்க வைத்தார்.

அவனும் படித்தான். பின் வேலைக்குச் செல்ல தந்தையிடம் அனுமதி கேட்டான்.

"நீ எதற்கு ஒருவரின்கீழ் கைகட்டிப் பணி புரிய வேண்டும்? நிரம்ப சொத்து இருக்கிறது. நாலு காணி நிலம் இருக்கிறது; வாழைத்தோட்டம் இருக்கிறது; தென்னந்தோப்பு இருக்கிறது; கரும்பு ஆலைக்குக் கரும்புத் தோட்டமும் போட்டாகிவிடும். இவையெல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு சுதந்திரமாக, நிம்மதியாக, கவலைப்படாமல் வாழலாமே. உன் படிப்புக்காகத் தான் பட்டினத்தில் வந்து தங்கினோம். அது முடிந்து விட்டது. கிராமத்திற்கே போய்விடலாம். நம்ம தோட்டம், துரவு எல்லாம் நம்ம கண்காணிப்பிலே இருந்தால்தானே நல்ல முறையில் இருக்கும்? இல்லையா நாவுக்கரசு?" என்றார் சாம்பசிவம்.

"ஆமாம் அப்பா. அது உண்மை தான். ஆனால் எனக்கு கிராமத்தில் இருக்கப் பிடிக்கவில்லை. எனவே நான் இங்கேயே ஏதாவது ஒரு அலுவலகத்தில் வேலைக்கு அமர்ந்து வாழ்கிறேன். நீங்களும் இங்கேயே இருங்கள். நான்கு வருடமாக நடந்தது போலவே கிராமத்தில் இனியும் எல்லாம் நல்லபடியாகத்தான் நடக்கும். கவலைப்படாதீர்கள் அப்பா. அப்படி உங்களுக்கு விருப்பமில்லாவிட்டால்,நீங்கள் வேண்டுமானால் அங்கே போய் இருங்

கள். நான் வரவில்லை. உழைத்துச் சாப்பிடுவதுதானே உடம்புக்கு ஒட்டும்? நீங்களும் இப்பொழுது பெருமையாகக் கூறிக்கொள்ளும் சொத்தும், நிலமும் நீங்கள் உழைத்துச் சேர்த்தது தானே? அதைப் போல் நானும் உழைத்து உண்ணவே விரும்புகிறேன் அப்பா. என்னைத் தடுக்காதீர்கள்" என்றுன் அவர் கூறியதற்கு பதிலாக நாவுக்கரசு.

"சரி உன் விருப்பம். நாங்களும் இங்கேயே இருக்கிறோம். ஒட்டல் சாப்பாடு உனக்கு உடம்பிற்கு ஒத்துக்கொள்ளாது. இன்னும் ஆறு மாதத்தில் உனக்கும் ஒரு பெண்ணைப் பார்த்து கல்யாணத்தை செய்து விட்டு நாங்கள் ஊரைப் பார்க்கப் போகிறோம்" என்று மகனின் ஆவலைப் பூர்த்திசெய்தார்.

மறுநாளே அவனும் ஒரு அலுவலகத்தில் வேலைக்கு அமர்ந்து விட்டான். எடுத்த எடுப்பிலேயே முன்னூறு ரூபாய் சம்பளம், உதவி மானேஜர் பதவி.

சாம்பசிவமும் தனக்குத் தெரிந்த நண்பர்களிடம் தன் மகனுக்கு ஏற்ற பெண் இருந்தால் பார்த்துச் சொல்லும்படி கூறினர்.

அவன் தனக்கு வரப் போகும் துணைவியைத் தேர்ந்தெடுப்பதில் மிகவும் தீவிரமாக இருந்தான்.

"தனக்கு வருபவள் செக்கச் செவேலென்று செம்மாதுளைப் பழம் போன்று இருக்கவேண்டும். தனக்காக ஓரடி உயரத்தில் குறைவாகவும், உடம்பு பருமனில் ஒரு சுற்று குறைவாகவும் இருக்கவேண்டும். அழகாக, எழிலின் பிரதிபிம்பமாக, ரம்பை ஊர்வசி போன்ற தேவலோக கன்னிகளைவிட அழகு மிகுந்த ஆரணங்காக இருக்கவேண்டும். ஆனால் அடக்கமாக இருக்கவேண்டும். இப்படிப்பட்ட பெண்ணையே நான் துணைவியாக ஏற்கப்போகிறேன்" என்று தந்தையிடமும் துணிந்து கூறிவிட்டான்.

தன் மகன் அழகில்கொண்டிருக்கும் மோகத்தை எண்ணி எண்ணி வியந்தார். உலகில் அழகும், இளமையும் நிலைத்து நிற்காது என்பதை உணராமல் பேசுகின்றனே என்று நினைத்து வருந்தினர்.

* * *

நாவுக்கரசு வீட்டுக்கு வந்து உடை மாற்றிக்

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. 5.)

A·C,C. CEMENTSTOCKIST

2, Sankari Road,

Trichengode,
(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பணிவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான வேலைத்து வேலைகளும், வெல்டிங்கும் செய்து கொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

கொண்டு கை, கால்களை அலம்பிக் கொண்டான்.

அவனுக்கென்று வைத்திருந்த சர்பத்தை அன்னை கொண்டுவந்து கொடுத்தாள்.

அருந்திவிட்டு அமைதியாக அமர்ந்தான். சாம்பசிவம் தன் நண்பர்கள்கூறிய நான்கு பெண்களின் புகைப் படங்களையும், குறிப்புக்களையும் காட்டினர். இதற்காகத்தான் அத்தனை நேரமாக அவர் துடி துடித்துக் கொண்டு காத்திருந்தது.

"மறுநாள் போய் பார்த்து விட்டு வரலாம்" என்றான்.

'சரி'யென்றார் அவரும்.

மறுநாள் சென்று பார்த்தான் நான்கு பெண்களையும் அவன். வீட்டிற்கு வந்ததும் "என்ன நாவுக்கரசு! எந்தப் பெண்ணிற்கு சம்மதம் தெரிவிக்கப் போகிறாய்?" என்றார் சாம்பசிவம்.

"ஒருவரையும் பிடிக்க வில்லை" என்று மறுத்துக் கூறி விட்டான்.

சினம் கொண்ட சாம்பசிவம், "ஏன் அவர்கள் நால்வரில் ஒருத்தி கூடவா உனக்குப் பிடிக்கவில்லை?" என்றார்

மகனிடம் சற்று அழுத்தம் திருத்தமாகவே.

" ஆமாம் அப்பா. ஒரு பெண்கூட எனக்குப் பிடிக்க வில்லை."

பிடிக்கவில்லையா? எப்படி பிடிக்கும்? அழகை தேடுகிறாய். அழகு அழகு என்று பிதற்றுகிறாய்! அழகும், இளமையும் நிலைத்து நிற்காது. அழிந்து போய் விடும். பேசாமல் என் நண்பன் அனந்தராமன் பெண்ணை மணந்து கொள்" நீண்டதொரு உபதேசம் மகனுக்குச் செய்தார் தந்தை.

"தயவு செய்து என் திருமண விஷயத்தில் என் தீர்மானத்தை மாற்ற வாதாடாதீர்கள். எனக்கு அந்த அனந்தராமன்பெண்ணும் வேண்டாம்" தந்தை கூறியதையெல்லாம் ஏற்கவில்லை அவன். அழகு, அழகு என்று அழகு மோகத்தில் மூழ்கிக் கிடக்கும் அவன் அவைகளை எப்படி ஏற்பான்?

"பின் எந்தப் பெண்தான் வேண்டும்?" சற்று எரிச்சலுடன் கேட்டார்.

" என் எண்ணத்திற்குப் பிடித்த அழகுப் பெண்தான் வேண்டும்."

"அப்படிக் கிடைக்காவிட்டால்..."

"அதுபோல் ஆகாது"

இதற்குமேல் அவரும்பேசவில்லை. அவனும் பேசவில்லை. அவர் உள்ளம், 'ஐயோ! அடக்கமும், ஒடுக்கமும் ஒருங்கே கொண்ட அனந்தராமன் பெண் அங்கயற் கண்ணியை ஒதுக்குகிறானே! இவனும் உலகில் மனிதன் தானா?' என்று எண்ணி ஏங்கினார்.

அதன்பின் அநேக பெண்களைப் பார்த்தார்கள். எல்லா பெண்களையும் ஒரு குறை கூறி மறுத்து விட்டான் அவன்.

* * *

வருடங்கள் ஒன்று, இரண்டு, மூன்று என்று விரைந்தன. ஆறு மாதத்தில் மகனுக்கு மணம் முடித்துவிட்டு கிராமத்திற்குப் போய்விடலாம் என்று நினைத்த சாம்பசிவம் ஐந்து ஆண்டுகள் ஆன பின்பும் போக முடியவில்லை.

எப்படியோ அவன் விருப்பிற்கு ஏற்ற ஒரு பெண்ணும் கிடைத்தாள். நேரில் சென்று தந்தை, தாய், தனயன் மூவரும் பார்த்தனர். அங்கேயே

'சரி' என்ற சம்மதச் சொல்லையும் கூறிவிட்டு உற்சாகத்தோடு வீடு திரும்பினான் நாவுக்கரசு.

அந்த அழகு நங்கையின் பெயர் பூவழகி. பெயருக்கேற்ற அழகிதான். பொன்னிறமேனி-நாவுக்கரசு விரும்பிய நிறம்; மாசு மறுவற்று வழவழவென்று முகம். சுட்டும் கூர் விழி; குழி விழும் கன்னம்; மென் உடல். இவ்வளவு அழகிருந்ததோடு அவ்விடம் அடக்கமும் இருந்தது.

நல்லபடியாகத் திருமணமும் நடந்தேறியது. நல்ல நாள் ஒன்றில் தனிக் குடுத்தனமும் வைத்து இரண்டு மாதகாலம் எப்படி நடத்துகிறார்கள் என்று கண்டு களித்து விட்டு மகிழ்வுடன் கிராமத்திற்குச் சென்றார் சாம்பசிவம் தம் மனைவியோடு.

அவர்கள் இன்பத்தை இன்னும் பன்மடங்காக்க இல்லறத்திற்கு நல் அணிகலனை குழந்தை பேற்றையும் அவர்கள் அடைய இன்னும் ஆறுமாத காலம்தான் மீதி இருந்தது?

நான்கு மாதமாய் முழுகாதிருக்கும் தன் துணைவியை முன்னிலும் அன்பாக நேசித்தான். கொஞ்சிக் கொஞ்சிப் பேசினான்.

* * *

ஒருநாள் அலுவலகம் சென்று திரும்பினான். வீட்டிற்கு வந்தவுடன் அவனுக்கு வருத்தமும், வேதனையும் தரக்கூடிய செய்தி காத்திருந்தது.

பூவழகி கட்டிலில் குப்புறப் படுத்திருந்தாள். ஒருதரம் முனகி, அப்படியும் இப்படியும் புரண்டாள்!

பரிவுடன் பீதியும் கலந்தது. என்ன பூவழகி உடம்பிற்கு?" என்றான் நாவுக்கரசு.

"நடுப்பகலிலிருந்து ஒரே தலைவலி. அதோடு காய்ச்சல் வேறு" அவள் இதைக் கூறுவதற்குள் குறைந்தது பத்து தடவை தலைவலி தாளாமல் முனகியிருப்பாள்.

"காய்ச்சலா? உனக்கா?" அவசரமாகக் கேட்டுவிட்டு நெற்றியைத் தொட்டுப் பார்த்தான், நெருப்பெனக் கொதித்தது!

"இதோ ஒரு நிமிஷத்தில் டாக்டரை வரவழைக்கிறேன்" என்று சொல்லி

விட்டு டெலிபோன் இருக்கும் அறையை நோக்கி ஓடினன்.

சிறிது நேரத்தில் டாக்டர் வந்தார். ஒரு ஊசியைப் போட்டு ஒரு புட்டி மருந்தையும் கொடுத்துவிட்டு மறுநாள் காலையில் வந்து பார்ப்பதாகக் கூறிவிட்டுச் சென்ருர்.

அன்றிரவு முழுவதும் நல்ல காய்ச்சல்தான். இடை இடை சிறிது தணிந்து வேர்த்துவிட்டுப் பின் தொடர்ந்து காயும். இப்படியே இரவு முழுவதும்!

மறுநாள் அவன் அலுவலகத்திற்குச் செல்லவில்லை. வேதனையோடு சென்ருல் அங்கே வேலைதான் ஓடுமா என்ன?

"டாக்டர் இப்பொழுது வந்துவிடுவார் பூவழகி" என்ருன்.

"வரட்டும்" என்று கூறிவிட்டு இமைகள் இரண்டையும் சேர்த்தாள்.

"இதென்ன முகம், கை எல்லாம் சிகப்பு சிகப்பாக?"

"ஆமாம் இரவு முழுவதும் வேர்வைப் புழுக்கத்தில் வேர்க்குரு வந்திருக்கிறது"

"இதோ டாக்டர் கூட வந்துவிட்டார்" என்று சொல்லிவிட்டு டாக்டரை வரவேற்ருன்.

மற்ருெரு ஊசியையும் டாக்டர் அவள் மென்னுடலில் குத்திஞர். மாலைக்குள் காய்ச்சல் நின்றுவிடும் என்றும் கூறிஞர்!

மாலையில் பூவழகி மென்னுடல் முழுவதும் காலையில் காணப்பட்டதைக் காட்டிலும் அதிகமான சிகப்புக் கொப்புளங்கள் ஊசி குத்த இடமில்லாமல் உடல் முழுவதும் இருந்தது! வெண்மை சதையில் சிகப்புக் கொப்புளங்கள் பளிச்சென்று தெரிந்தன!

இதைக்கண்ட நாவுக்கரசின் கண்கள் கலங்கின! உடல் நடுங்கியது!

பூவழகி புலம்பிஞள்! "செய்யக்கூடாத ஒன்றைச்" செய்து விட்டோம், அம்மை போட்டிருக்கிறது. இதைக் காலையிலேயே அறியாமல் வேர்க்குரு என நினைத்து, ஊசியையும் போட்டுக் கொண்டாகிவிட்டது. அம்மை பூட்டிய உடம்பில் ஊசி போட்டால் கோரமாகி விடுமாம். என்ன செய்கிறது



என்று சொல்லிச் சொல்லி அவள் அழுதாள்!

நாவுக்கரசும் கண்ணீர் சிந்தினான்! அன்றே தன் பெற்றோர்களுக்கு உடனே வரும்படி தந்தி கொடுத்தான்.

மறுநாளே அவர்களும் வந்தார்கள். பார்த்துவிட்டு "பெரியம்மை ரொம்ப ஆங்காரமாய் முத்துக்களைப் போட்டிருக்கிறாள். என்னவோ சின்னஞ்சிறுசுகள். செய்த பிழையெல்லாம் பொறுத்து நீதான் காப்பாற்ற வேண்டும் தாயே மகமாயி! என்று நாவுக்கரசின் அன்னை மாரியம்மனை வேண்டிக் கொண்டாள்.

கண்ணிரண்டும் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரமா? இருபத்தொரு நாட்கள் பறந்தோடின. இருபத்து இரண்டாம் நாள் பூவழ்கி உடலில் அம்மை இறங்கி விட்டது. அம்மை இல்லை. ஆனால் அதன் வடுக்கள் வட்ட வட்டமாய் உடல் பூராவும் இருந்தது.

வழவழவென்று அழகாக இருந்த முகத்தில் வடுக்கள்! வெண்மை உடம்பில் பளீச்சென்று கருப்புப் புள்ளிகள்! அழகையே கெடுத்தன வடுக்கள்...!

அழகாக இருந்த அவள் முகம் அகோரமாகிவிட்டது! அவள் முகத்தைப் பார்க்கும் பொழுதெல்லாம் அவனுக்குப் பேரிடிவிழுந்த பனைமரம் பற்றி எரிவதைப்போல் வயிறு கொதித்தது! உள்ளம் குமுறியது!

இப்பொழுது நாவுக்கரசு உணர்ந்தான், "தந்தை கூறியபடி அழகு உலகில் நிலைத்து நிற்காது" என்பதை!

தொழிலின்றி வாழ முடியாது என்பதை எடுத்துக் காட்டுகிறது இவர்கள் குடும்பம்.

வைராக்கியம்

—[விபீஷணன்]—

"அத்திபூத்தது போல் ஆச்சரியமாக இருக்கிறதே! எப்போது வந்தாய் ராம கிருஷ்ணு?" என்று கண்களை உயர்த்திக் கேட்டு வரவேற்றூர் அனந்தசயனம்.

"கங்கா ஸ்நானம் கிடைக்கணும்னு இருக்கு. நினைச்சேன், வந்துட்டேன். நீ சுகமா? ஆத்திலே..."

"நான் சௌக்யம்தான். நான் இப்போது ஒண்டிக் கட்டை. ஆத்திலே 'அவள்' போய் வருஷம் அஞ்சு போயிடுத்து. விரக்தியினுலே காசியிலேயே கடைசிக் காலத்தைக் கழிக்கலாம்னு வந்தேன். பிள்ளையாண்டான்கள் கூப்பிட்டான்கள். 'போங்கடா, அந்த விசுவேசுவரனை த்தரிசிச்சிண்டு கங்கையில் முழுகிக் கொண்டிருந்தால் போதும்டா' என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். பார்த்தயா என் மடபுத்தியை. நீ ஏதோ வராதவன் வந்திருக்கிறுய். வரதுக்குள்ளேயே என் சோகப்பாட்டைப் பாடிவிட்டேன். உள்ளே வா குளிச்சி, சாப்பிட்டு விட்டுப் பேசுவோம்".

குளித்துவிட்டுச் சாப்பிட உட்கார்ந்தார்கள். 'என்ன ராமகிருஷ்ணு, சமையல் நான்தான் செய்கிறது. நன்னுயிருக்கோ என்னவோ......"

"பிரமாதம் போ! அந்த நாளிலே வீட்டுக்குத் தெரியாமல் சாமான் எடுத்து வந்து வெண்பொங்கல் பண்ணுவோமே. ஞாபக

தந்தையைத் தருதிக் குறைவாய் நினைத்து நடத்தும் மகனுக்கு தக்கதோர் மதியைப்புகட்டுவதாக அமைந்துள்ளது "வைராக்கியம்" சரளமான தமிழில், விறுவிறுப்பான போக்கில் கதையை ஓட்டிச்சென்றுள்ள விபீஷணனின் முயற்சி பாராட்டத்தக்கது. ஆ—ர்.

யிருக்கா? அப்பவே பேஷா யிருக்கும்!'

"உன் குழந்தைகள் எல்லாம் சௌக்கியமா?

சும்மா இப்படி ஊர் சுற்றிப்பார்த்து விட்டு கங்கையில் முழுகிவிட்டுப் போக வந்தாயா? கூட்டி வரக் கூடாதா உன் பிள்ளை நாராயணனையும்?"

"காசிக்கு வந்தும் கருமம் தொலைய லெங்கிற கதை மாதிரி பிள்ளை வேறு கூடவரணுமா இங்கு?"

"அதென்ன? என்ன நடந்தது? சீக்கிரம் சாப்பிட்டுவிட்டுச் சொல்லு. அது தான் 'ஏண்டா' என்று பார்த்தேன் உன்னைக் கண்டவுடனேயே ஒரு சந்தேகம். அகத்தில் இருப்பது தான் முகத்தில் தெரிகிறதே!"

சாப்பிட்டுவிட்டு இரு கிழவர்களில் ராமகிருஷ்ணன் ஆரம்பித்தார்.

2

"உனக்குத் தான் தெரியுமே நான் ஆடம்பரத்தை வெறுப்பவன் என்று. ஒரு நாள் காலையிலெழுந்து குளித்து பட்டை பட்டையாக விபூதி இட்டுக்கொண்டு அரையில் ஒரு சிறு முண்டும் தோளில் ஒரு சிறு துண்டும் அணிந்து பங்களாக் காம்பவுண்டிற்குள் இருந்த தோட்டத்தில் பூப்பறித்துக் கொண்டிருந்தேன் பூஜைக்கு.

'கிரீச்' சென்ற சப்தத்துடன் ஒரு கார் வந்து நின்றது. திரும்பிப் பார்த்தேன். காரிலிருந்து யாரோ பெரிய மனிதர் மாதிரி உடையணிந்த ஒருவர் இறங்கினார். கூடவே ஒரு வாலிபனும் இறங்கினன். அப்போது தான் ஞாபகம் வந்தது. 'ஓஹோ, பேத்தி லதாவை பெண் பார்க்க' வரப்போவதாகச் சொன்னவர்கள் போலிருக்கு" என்று நினைத்துக் கொண்டேன். பத்து மணிக்கு வரவேண்டியவர்கள் இரண்டு மணி நேரம் முன்னதாக வந்திருந்தனர்.

பூக் கூடையைப் பார்த்தேன். கொஞ்சம்தான் புஷ்பம் இருந்தது. கூட ஒரு கை பறித்துக் கொண்டு போகலாம்என்று பூப்பறிப்பதற்கு ஆரம்பித்தேன். சூரிய ஒளி தவிர மற்ருெரு ஒளி நான் பூப்பறித்துக்கொண்டிருந்த செடியில் பாய்ந்தது. திரும்பினேன். அந்த ஒளி வந்திருந்த பண்ணையாரின் விலை மோதிரத்திலிருந்து தான் வந்து கொண்டிருந்தது.

'பெரிய பணக்காரர்தான் போலிருக்கிறது. நல்ல இடத்து சம்பந்தந்தான். பேத்தி அதிருஷ்டசாலி!' என்று மனதில் சந்தோஷப்பட்டுக் கொண்டேன். அப்போது என் பிள்ளை நாரர்யணனும் வந்தவரும் முன் வாசலில் போட்டிருந்த ஊஞ்சலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தார்கள். வந்தவர் தன் கையை என் பக்கமாகக் காட்டிக் கேட்டார்.

"அவர் யார்?"

இப்போது நடந்ததை இப்போது நினைத்தாலும் ஆனந்தா என் நெஞ்சம் குமுறுகிறது.

என் பிள்ளை என்ன சொன்னான் தெரியுமா?

"எங்கள் வீட்டுச்சமையற்காரர்!" என்னைத் தன் தகப்பனார் என்று சொல்லிக் கொண்டால் தன் கௌரவத்திற்குக் குறைவு என்று நினைத்தான் போலிருக்கு. எனக்குக் கேட்காது என்று நினைத்துச் சொல்லிவிட்டான்.

எனச்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது. ஏன் ஆவேசமே வந்துவிட்டது என்று கூடச்சொல்லலாம். வெறிபிடித்தவன் போல் அவர்களைநோக்கி ஓடினேன். அப்போதே என் புத்திர காமேஷ்டி நடுங்குவது தெரிந்தது.

என் உள்ளத்து உணச்ச்சிகள் எல்லாம் வார்த்தைகளாக உருவெடுத்தன.

"நானுடா சமையற்காரர்? இல்லை நானுடா? இப்படிச் சொன்னுனே சார், இவனைச் சமைத்தவனே நான்தான்! பெற்ற தகப்பன் என்று சொல்லிக் கொள்ள வெட்கப் படுமளவுக்கு என்ன பாதகமடா செய்து விட்டேன்? இனி நீ எனக்குப் பிள்ளையுமில்லை; நான் உனக்குத் தகப்பனுமில்லை.எல்லாம்விட்டது போ!"—கோபாவேசமாக ஆடித்தீர்த்தேன். கோப வெறியில் இன்னது செய்கிறோம் என்ற உணர்வே இல்லாமல் மேலே போட்டிருந்த துண்டை அவர்கள் முன் இரண்டாகக் கிழித்து ஒரு பாதியை அவன் முகத்தில் விட்டெறிந்து விட்டு அந்த வெயிலில் கிராமத்தை நோக்கி நடக்க ஆரம்பித்தேன். அப்படியே திகைச்சுப் போய்நின்றுவிட்டான்பிள்ளையாண்டான். திரும்பிமே

2/21, Pilliar Koil Street,
MADRAS-3

பார்க்காமல் வந்தவன் என் தங்கை வீடு சென்றுவேஷ்டியும் உத்தரீயமும் வாங்கிக் கொண்டு முன்பே கொடுத்து வைத்திருந்த பணத்தில் கொஞ்சம் வாங்கிக் கொண்டு புறப்பட்டேன். உன் ஞாபகம் வந்தது. நேரே காசியைப் பார்க்கக் கிளம்பிவிட்டேன்!'' என்று முடித்தார் ராமகிருஷ்ணன்.

''த்ஸ—! த்ஸ—! அப்படியா. தெரிஞ்சுது அவ்வளவு தான். போ, விடு! மன்சில் வைத்துக்கொண்டு ஏதாவது திட்டிவிடாதே. பல்லில் விஷமிருக்குமாம். பலித்தால் கஷ்டப்படுவது நம் குழந்தைகள் தான். என் கூடவே இருந்துவிடு. இரண்டு பேருக்குக் காணும் படியான அளவு வசதி அளித்திருக்கார் அந்த சர்வேசுவரன்!'' என்று கண்ணைத் துடைத்துக் கொண்டார் அனந்தசயனம். அது வல்லவா உண்மை நட்பு!

அவ்விரு கிழவர்களாலும் 'நட்பு' தன் பெருமையைஒரு படி உயர்த்திக் கொண்டது. அவ்விருவர்களும் நாள் தவறாமல் கங்கையில் ஸ்நானம் செய்துகொண்டு விசாலாட்சி -விஸ்வேசுவரனைக் கண்ணாரக் கண்டு களித்து அவன் புகழ் பாடி நாட்களைக் கடத்த ஆரம்பித்தனர்.

3

''நல்லபடியாகத் திரும்பி வரணும்னு பகவானை வேண்டிக்கோ. வயிற்றில் வலி எடுத்தால் இந்த லேகியத்தைப் போட்டுக்கோ. இதை ஒரு டப்பா நிறையப்போட்டு உன் ட்ரங்கில் இடது மூலையில் வைத்திருக்கிறேன். ஞாபகமாக அந்த மாங்காய் ஊறுகாய் ஜாடியையும் எடுத்துக்கோ. உன் தங்கை லக்ஷ்மி

மிக்கு மாங்காய் ஊறு காய்ளு உயிர்!''-என்று உபதேசித்த வண்ணமிருந்தாள் நாராயணி அம்மாள்.

"என்ன அப்பா இதெல்லாம்?நான் என்ன அங்கு குடித்தனம் போடப் போகிறேனு, அல்லது 'கிரிக்கெட் மாட்சு' விளையாடப் போகிறேனு? இதையெல்லாம் எடுத்துக் கொண்டுபோக மாட்டேன். யாராவது பார்த்தால் சிரிக்கப்போகிறார்கள்!" என்று மறுப்புக் குரல் எழுப்பினன் கிச்சாமி.

"சிரிப்பு என்னடா இதில்? 'மாட்சு' விளையாட வட இந்தியா போகிருய். 'யார் இல்லை என்ருர்கள்? கல்கத்தா வரை போகிறவன் அங்கிருக்கும் தங்கைக்கு ஊறுகாய்கொண்டுபோய் கொடுத்தால் தேய்ந்து போய் விடுவாயா என்ன? என்று கேட்டுக்கொண்டே உள்ளே வந்தார் நாராயணன்!

'சரி! என்று ஒத்துக் கொள்வதைத் தவிர வேறு வழி இருக்கவில்லை கிச்சாமிக்கு.

'தலைவைக்காலை வலித்தால் நல்ல மருந்தாக வாங்கிப்போட்டுக்கொ. எதையாவது கண்டு பயந்தால் அந்த மார்க்கபந்து ஸ்தோத்திரம்—அது தான் உன் தாத்தா அடிக்கடி சொல்வாரே...என்று முடிக்குமுன் திரும்பிய நாராயணி அம்மாள் தன் கணவரின் கண்களில் கோபக்கனல் வீசுவது கண்டு மோனமாகி சமையற்கட்டை நோக்கி நழுவினுள்.

* * *

'லொக் லொக்' என்று இருமியவாறு படுத்திருந்தார் அனந்தசயனம் அந்த ஆஸ்பத்திரியில். அவர்படுக்கையில் அமர்ந்து கொண்டு கண்ணீர் உகுத்துக்கொண்டிருந்தார் ராமகிருஷ்ணன்.

'ஐயோ ஆனந்து! நீ இப்படிப் படுப்பாய்னு நான் நினைக்கவேயில்லையே! மலை போல் நீ இருக்கிருய் என்ற தென்புடனேயே நான் வளைய வந்து கொண்டிருந்தேன். நீ என்னை விட்டுப்போய் விட மாட்டாயே?"

"இதென்னடா சின்னக் குழந்தை மாதிரி? அழாதே. நீ எப்போதுமே இளகிய மனசுக்காரண்டா?வியாதிவராதா எவருக்கும்? இதற்குப்போய் மனதை அலட்டிப்பாளா?"

மனிதன் உடல் இரும்பால் ஆனதல்லவே! உழைத்து

உல்ழ்த்து ஓடாய்த் தேய்ந்திருந்த அனந்த சயனம் படுத்து விட்டார். நண்பர் எங்கே தன்னை விட்டுப் பிரிந்து விடுவாரோ என்று ஏங்க ஆரம்பித்தார் ராமகிருஷ்ணன். நாலு நாட்கள் இரவு பகலாக ஆஸ்பத்திரியிலேயே இருந்து வேண்டிய சிசுருஷைகள் செய்தார் ராமகிருஷ்ணன். அதன் பயனுகவோ, டாக்டரின் சாமர்த்தியத்தினுலோ, அல்லது காசி விச்வேசுவரனின் கிருபையினுல்தானே பிழைத்து விட்டார் அனந்தசயனம்!

அன்று மறுநாள் ஆஸ்பத்திரியிலிருந்து அனந்த சயனத்தை 'டிஸ்சார்ஜ்'பண்ணி விடுவதாக பெரிய டாக்டர் சொல்லிவிட்டார். பிழைக்க வைத்த பகவானைக்கைகுவித்துக் கும்பிட்டுக் கொண்டிருந்தனர் இருகிழவர்களும். அப்போது.

ஒரு சிறுகூட்டம் இரைச்சல் போட்டுக்கொண்டு உள்ளே வந்தது.

"யாரோ ஒருவர் தலையில் மரக்கிளை விழுந்து மண்டை உடைந்து இரத்தம் ஏகமாக வெளியேறிவிட்டது" என்று கேட்டுத் தெரிந்து கொண்ட ராமகிருஷ்ணன் தன்னைக் கடந்து சென்று கொண்டிருந்த 'ஸ்ட்ரெச்சரை' நோக்கினுர். 'ஷாக்' அடித்த உணர்ச்சி ஏற்பட்டது அவருக்கு. சற்று முன்னுல் வந்து பார்த்தார். அடுத்தவினுடி.

"ஐயோ கிச்சாமி!" என்ற அவர் அலறல் அந்த ஆஸ்பத்திரியெங்கும் எதிரொலித்தது.

'என்ன உங்களுக்கு இவரைத் தெரியுமா?' என்று யாரோ கேட்டதற்கு, 'என் பேரன் ஐயா, அவன் என் பேரன். குழந்தைக்கு இது எப்படி ஏற்பட்டது?' என்று வருந்திய வண்ணம் உள் நுழைந்தார்.

"ஊஹும்...இரத்தம் ஏகத்துக்கு வெளியேறிவிட்டது. புது இரத்தம் கொடுத்தால் பிழைக்கலாம். ஆஸ்பத்திரியிலோ இவருக்குச் சேரக் கூடிய இரத்தமுமில்லை......"—பெரிய டாக்டர் கூறினுர்.

"டாக்டர்! எப்படியும் அவன் பிழைத்தால் போதும் டாக்டர்! என் இரத்தத்தை எடுத்துக் கொள்ளுங்கள். என் உதிரத்தின் உதிரம் ஸார் அவன்: அதனுல் இரத்தம் சேரும் சார். தயவு பண்ணுங்கள் சார்!"—தினமாலை குா

வில் வேண்டினர் ராமகிருஷ்ணன்.

'உம்'...ஒரு நிமிடம் யோசித்தார். 'உங்கள் உடம்பு மிக பலவீனமாக இருக்கிறது. இந்தத் தள்ளாத வயதில் உங்களிடமிருந்து இரத்தம் எடுத்தால் என்ன நேருமோ?'

"என்ன நேர்ந்தாலும் சரி டாக்டர். நான் கருகி உதிர வேண்டிய பழுத்த இலை. அவன் அப்படியல்ல. வளமான வாழ்வை எதிர்நோக்கியிருக்கும் இளம் கன்று. அவன் பிழைத்தால் போதும் டாக்டர்."

எழுதி வாங்கிக் கொண்டு டாக்டர் ராமகிருஷ்ணனின் உடம்பிலிருந்து இரத்தம் எடுத்துக் கிச்சாமியின் உடலில் செலுத்தினர். கல்கத்தா வந்த கிச்சாமிக்குக் காசியையும் பார்த்து விட்டுப்போவோமே என்ற ஆசை பிறந்தது. காசிக்கு வந்தான். வந்த இடத்தில் சாலையோரத்தில் நடந்து கொண்டிருந்தபோது ஓர் மரத்தின் கிளை முறிந்து விழுந்தது. ஆஸ்பத்திரிக்கு எடுத்து வரப்பட்டான். அவன் தந்தைக்குத் தந்தி பறந்தது.

P. ஹாசேன்ஷா & சன்ஸ்

P. H. முகமது நஸீருத்தீன்

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்
G I பைப் & பைப் பிட்டிங்ஸ் வியாபாரம்,
இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

பாலக்கரை ரோடு திருச்சி-8.
தபால் பெட்டி நெ. 456
போன் : 786
தந்தி : HARDWARE

5

கிச்சாமி! என் வயிற்றில் பாலை வார்டா கண்ணே! "என்று கத்திக்கொண்டே கிச்சாமியின் படுக்கையை நோக்கிப் பாய்ந்து வந்தனர் நாராயணி அம்மாளும், நாராயணனும்.

'கண்ணை முழிக்காமெ படுத்திருக்காதே குழந்தை!' என்று அரற்றிய நாராயணி அம்மாள் முன் வந்து "டாக்டர்! என்ன நடந்தது? என் குழந்தை பிழைப்பானா?" —பிள்ளைப்பாசத்தால் துடித்



வ. உ. சி. கலைக்கூடத்தில் தயாரித்த சிற்பத்தை காமராஜ் கவனிக்கிறார்.

துக்கொண்டிருந்த நாராயணனும் நாராயணியும் டாக்டரின் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தனர்.

"பிழைப்பான்" என்றார் டாக்டர்.

"எங்கள் தெய்வம் சார் நீங்கள்!"

"இல்லை! அந்த தெய்வம் அதோ படுத்திருக்கிறார். அவர் மட்டும் இரத்தம் கொடுத்திராவிடில்..." சடாரெனத் திரும்பினர் தம்பதிகளிருவரும்.

கிழித்த நாராகப் படுத்திருந்த ராமகிருஷ்ணனை அடையாளம் புரிந்து கொண்டார். நாராயணன் அடிவயிற்றிலிருந்து குரல் எழும்பியது:—

"அ...ப்...பா!"

கிழவரின் கட்டிலை நோக்கிப் பாய்ந்தனர் இருவரும்.

திருந்திய தனயனின் மன்னிப்புக்கோரலை செவிமடுக்காமலே, 'மனிதனுக்கு மனிதன் செய்யவேண்டிய கடமையைச் செய்தோம்" என்ற நிம்மதி முகத்தில் படரப்படுத்திருந்த கிழவரின் உடல் குளிர்ந்தது!

கருத்துரை :

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

மோகன் சைகாலின் புது டில்லி (New Delhi) என்ற படம் வெளி வந்தபோது தமிழ் மக்களிடையே பெரும் பரபரப்பு ஏற்பட்டது. "என்ன கொடுமை! வடநாட்டான் தமிழனை இழிவுபடுத்தி விட்டான்! இதை அனுமதிக்கலாமா தமிழர்கள்!' என்ற கண்டனக் குரல்கள் எழுப்பப்பட்டன! ஆனால் அந்தோ பரிதாபம்! தமிழனை இழிவுபடுத்திய அதே கதையை வாங்கி தமிழ் நாட்டில் படம் எடுத்து வெளி வந்தவுடன் கைதட்டி ஆரவாரம் செய்கிறோம்! அவன் நம்மைப் பார்த்து ஏளனப் புன்னகை உதிர்க்கிறான்! இது என்ன நாட்டுப் பற்றோ?

அவர்கள் இந்தியாவை ஒரே நாடாக்கக் கருதி பஞ்சாபி, வங்காளி, தமிழன் இவர்கள் மூவரையும் வைத்து இவர்களிடையே இன ஒற்றுமையை வளர்க்க வேண்டும்! நாம் எல்லோரும் இந்தியரே! என்ற கொள்கையை அடிப்படையாக வைத்து 'நியூ டெல்லி'யை தயாரித்தனர். அதே கதையைத் தான்

நரஸு ஸ்டுடியோவினர் தமிழ், கேரள, கன்னட நாட்டினரை ஒன்றுபடுத்தி கதையைத் தயாரித்திருக்கின்றனர். புதிய கருத்துத்தான்! ஆனால் அது நம் இரவல் என்கிறபோது நம்மிடையே ஒரிஜினலிட்டியே இல்லையோ என ஐயுறவேண்டி இருக்கிறது.

திரைக்கதை வசனத்தை துறையூர் மூர்த்தி எழுதி இருக்கிறார். வசனங்கள் கூட பெரும்பாலும் இந்தியாய் இருந்து எடுக்கப்பட்டவையே! அதோடு வேறு இந்திப்பட வசனங்களும் இதிலே நடமாடுகின்றன. ஜானகியைத் துரத்திக் கொண்டுபோகும் கோபாலைப் பார்த்து "ஏன் என் பின்னாலேயே வருகிறாய்?" என்று ஜானகி கேட்பதும் "நீ ஏன் என் முன்னாலேயே போகிறாய்?" என்றுகோபால் பதில் சொல்வதும் "தலாக்" என்ற இந்திப்படத்தில் கையாளப்பட்டுள்ள வசனம்! நம்முடைய பேனாவுக்குத்

விழாவில் அமெரிக்க பிரமுகர் ஸ்ரீ லாரன்ஸ் கரூபி.



விழா கூட்டத்தின் தலைவர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார் பேசுகிறார்.

திறமை இல்லையா என்ன? தமிழ் தெரிந்த வடநாட்டான் இதைப் பார்த்தால் நம்மை குறைவாக வல்லவோ எடை போட்டு விடுவான்? சில இடங்களில் வசனங்கள் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது! நமது பாராட்டு!

இந்தியில் கிஷோர் குமார் மேற்கொண்ட பாகத்தில் ராஜேந்திரன் நடிக்கிறார். கூத்தடிப்பதும் கும்மாளம் போடுவதும்தான் அவருக்குள்ள பாகம் என்றால் பாராட்டவேண்டியதே! கிஷோரின் நடிப்பை ராஜேந்திரனிடம் காணமுடியவில்லை என்றாலும் சில இடங்களில் கிஷோரையும் தோற்கடிக்கிறார்.

வைஜயந்தியின் பாகம் சரோஜா தேவிக்கு! தோற்றத்தில் இருவருக்கும் நல்ல ஒற்றுமை இருக்கிறது! நடிக்க முயன்று வெற்றியும் பெற்றிருக்கிறார் என்றுதான் சொல்லவேண்டும். 'ராதை' நாட்டியத்தில் பாவ உணர்ச்

....

சிகளுடன் அருமையாக ஆடி இருக்கிறார். சைக்கிளில் செல்லும்போது தண்ணீர் தெறித்து தன்மேல் பட்டதும் குறும்புக் கோபத்துடன் சைக்கிளில் சென்ற கோபுவை அழைத்து அவன்மேல் தண்ணீரை இரைத்துவிட்டுச் செல்லும்போது சரோஜா தேவியின் நடிப்பு அற்புதமாய் இருக்கிறது!

• கன்னடக்காரத் தந்தையாக சுப்பையா நடிக்கிறார். அசல் கன்னடக்காரராகவே தோன்றுகிறார். ஆனால் அடிக்கடி தன் தோள்களை உயரத்தூக்குவது அவ்வளவு நல்லா இருக்கிறதா? அடடே! இந்திப்படத்தில் வருபவரும் அப்படித்தான் நடிக்கிறாரோ? அப்ப சரிதான்!

கோபுவின் தங்கையாக கிரிஜாவும் அவள் காதலன் மாதவனாக பிரேம் நஸீரும் நடிக்கின்றனர். கொடுத்த



ஸ்ரீ கே. தண்டபாணி சரஸ்வதி தம்பதிகள், இவர்கள் திருமணம் 2[illegible]—[illegible]—[illegible]9 சென்னை ராயப்பேட்டையில் நடந்தது.

பாண்டித்தேவனில் ஓர்காட்சி.

பாகத்தை குறையின்றி நடிக்கின்றனர்.

பாலசுப்பிரமணியத்தின் நடிப்பில் வழக்கம் போல் மிடுக்கும் துடிப்பும் இருக்கிறது. வி. கே. ராமசாமி! அவரைப்பற்றிச் சொல்லவா வேண்டும்?

படத்தை டைரக்ட் செய்திருக்கும் ராஜகோபால்நல்ல இளைஞர். இந்திப் படத்தில் இருக்கும் காட்சிகள் அப்படியே காணப்படுவதால் அவருடைய திறமையைப் பற்றிக் குறிப்பிட்டுச் சொல்ல முடியாது! ஆனால் நடிகர்களை நன்கு பயனபடுத்தி வேலை வாங்கி இருக்கிறார் என்பது மட்டும் உண்மை!

சலபதிராவின் இசையமைப்பு பரவாயில்லை. சரோஜா தேவி ஆடும் ராதை நடனத்தின் போது பாடப்படும்

"மன ஊஞ்சலிலே ஆடும் மன்னா!" என்ற பாடலை காது குளிர கேட்டுக் கொண்டே இருக்கலாம்போலிருக்கிறது. காரணம், இந்தி நியூடெல்லியில் வைஜயந்தியின் அதே ராதை நாட்டியத்திற்காக அமைக்கப்பட்டுள்ள அதே பர்ட்டின் மதிப்புத்தான் இந்தப் பாட்டு. பிறகு ஏன் இனிமையாய் இருக்காது! ஜானகி வெகு அற்புதமாய் பாடி இருக்கிறார். இந்தப் பாட்டை. "பதுமை தானே" "ஒண்ணு வேணுமா?" போன்ற பாடல்களும் இந்தி மெட்டுக்களே!

குமார தேவனின் படப்பிடிப்பு நன்றாக இருக்கிறது. வெளிப்புறக் காட்சிகள் பிரமாதமாய் எடுத்திருக்கிறார். ஆனால் 'பாக் புரொஜக்ஷன்' காட்சிகளில் இன்னும் கவனம் செலுத்தி இருக்கலாம்.

முழுக்கமுழுக்க இந்திப் படத்தையே காப்பி அடித்து படம் எடுக்கப்பட்டிருப்பதால் இரண்டாவது தடவை படம் பார்ப்பது போன்ற உணர்வு ஏற்படுகிறது. 'நியூ டெல்லி'யைப் பார்க்காதவர்களுக்கு வேண்டுமானால் நரஸுவின் இப்படம் புது

படிதாண்டா பத்தினியில் ஓர் காட்சி.

மையின் தாய் இருக்கலாம்! ஆனால் பார்த்தவர்களுக்கு?

'கூடிவாழ்ந்தால் கோடிநன்மை' என்ற இப்படத்திற்கு இப்பெயரைச் சூட்டியவருக்கு 100-சன்மானம் கொடுத்தார்களாம். அப்படி என்ன இருக்கிறதோ பெயரில்? அப்படியானால் படம்? அடிப்படைக் கருத்தை தெளிவு படுத்தாமல் விட்டுவிட்டாலும் பொழுது போக்குக்காவது பார்த்துப் பரவசப் படலாமே! ஆனால் அதன் பெருமை மோகன் சைகாலுக்கே! ஏனு! நானு எரிந்தல்லா ஹொரத்தாய்ட்தா?

—சோ. க.

திருமணம்

12—2—59 வியாழன் காலை ஸ்ரீ ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்களின் சகோதரர் (நித்யானந்தம் பிள்ளை) குமாரர் கதிர்வேலு முருகனுக்கும், ஸ்ரீ சுந்தரம் செட்டியார் அவர்கள் குமாரி சுலோசனாவுக்கும் ராயப் பேட்டை லாயிட்ஸ் ரோடு 192-ம் எண்ணுள்ள இல்லத்தில் சிறப்பாக நடந்தேறியது.

ஒருபொலி காளை விலை ரூ. 5½ லக்ஷம்

கிளாஸ்கோவில்தனக்கு நிகர் வேறில்லை என்று வீரமுழக்கம் செய்துள்ள 13 மாதம் பொலிக்காளையொன்று ஐந்தேகால் லக்ஷம் ரூபாய்க்கு ஏலம் போயிற்றும். பிரிட்டனில் இதுவரை எந்த மாட்டுக்கும் இந்த விலை கிடைத்ததில்லையாம்.

மூன்று அமெரிக்க வியாபாரிகளுக்கிடையே போட்டி ஏற்பட்டதால், பணத்தைப்பற்றிக் கொஞ்சமும் லட்சியமில்லாமல் அவர்கள் விலையை ஒரேயடியாக உயர்த்திவிட்டனர். கடைசியில் அப்பொலிக்காளையின் எஜமானனை நியூயார்க் வியாபாரி ஒருவருக்கு அதிர்ஷ்டம் தேடி வந்தது.

Edited & Published by K. Perumal Udayar,
55, Edapalayam Street, Madras-3. Asst. Editor : K.G. RAJU
Printed by K.N.Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, EdapalayamSt.,Madras-3